# தாளில் பறக்கும் தும்பி



ஜமீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளில் பறக்கும் தும்பி

## ஜமீல்

வெளியீடு :

புதுப்புனைவு இலக்கிய வட்டம்
மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாளில் பறக்கும் தும்பி

**ஜமீல்**

இயற்பெயர் அப்துல் றகுமான் அப்துல் ஜமீல். கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் மருதமுனைக் கிராமத்தில் பிறந்தவர். 1993 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய விருதைப் பெற்றவர். இவரது முதல் கவிதைப் பிரதி 'தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள்' 2007 யாழ் இலக்கியப் பேரவையின் கவிஞர் அய்யாத்துரை விருதையும், தடாகம் இலக்கிய வட்டத்தின் கலைத்தீபம் விருதையும் பெற்றது. 'உடையக் காத்திருத்தல்' 2010 கொடகே சாகித்திய விருதின் இறுதிச் சுற்றில் சான்றிதழினைப் பெற்றதோடு 'காற்றை அழைத்துச் சென்றவர்கள்' 2014 ஆம் ஆண்டு கொடகே சாகித்திய விருதின் சான்றிதழையும், அரச சாகித்திய விருதின் சான்றிதழையும், பேனா கலை இலக்கியப் பேரவையின் விருதையும் பெற்றுக்கொண்டது.

124 ஏ, ஸ்டார் வீதி,
பெரியநீலாவணை – 01
மருதமுனை
இலங்கை.

கைபேசி: 077 – 9689392.
மின்னஞ்சல் – jameel2013a@gmail.com
முகநூல் – Abdul Jameel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாளில் பறக்கும் தும்பி - கவிதைகள்

ஆசிரியர்: ஜமீல். ©அப்துல் றகுமான் அப்துல் ஜமீல். விலாசம்: 124 ஏ, ஸ்டார் வீதி, பெரிய நீலாவணை — 01, மருதமுனை, இலங்கை. கைபேசி: 077 — 9689392. முதற்பதிப்பு: ஜூன் 2015. வெளியீடு: புதுப்புனைவு இலக்கிய வட்டம், மருதமுனை. கணினி வடிவமைப்பு: ஏ.எம். அமானுல்லாஹ். அட்டை வடிவமைப்பு: ஏ.கே. காமிஸ் கலீஸ் அச்சுப் பதிப்பு: நியூ செலக்ஸன், அக்கரைப்பற்று. பக்கம்: 84. விலை: 280.00

## Thaalil Parakkum Thumpi : Poems

Author: Jameel. © Abdul Rahuman Abdul Jameel, Address: 124A, Star Road, Periyaneelavanai-01, Maruthamunai, Sri Lanka, Mobile: 077-9689392. First Edition: June-2015, Published by: Puthuppunaivu Ilakkiya Vaddam, Maruthamunai. Type Setting & Layout by : A. M. Amanullah. Cover Design by: A.K. Kamis Kalees, Printed By: New Selection, Akkaraipattu, Pages: 84. Price: Rs. 280.00

ISBN: 978-955-7733-00-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது என் சகோதரர்கள்
அப்துல் பத்தாஹ், அப்துல் ஜப்பார்,
அத்தோடு மைத்துனர் சலீமுக்கும் ஆனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு வானம் நன்றி...

மீள் பார்வை (நிழல் வெளி), எங்கள் தேசம் (உயிர் மொழி), தினகரன் வாரமஞ்சரி, வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி, தமிழ்த் தந்தி, விடிவெள்ளி (சொல் புதிது, ஆறாம் விரல்), படிகள், அலைகள், தாமரை, வலைப்பூக்கள் அத்தோடு எனது மூன்றாவது பிரதியை மதிப்பீடு செய்த ஜிப்ரி ஹஸன், எஸ். நளீம், விஜிலி, நஸார் இஜாஸ், எம்.எல்.எம். மன்சூர், தெளிவத்தை ஜோசப், வீ.மைக்கல் கொலின், முல்லை முஸ்ரிபா, அம்ரிதா ஏயெம், வஸீம் அக்ரம், உக்வல்லை அக்றம், ஏ.எம்.குர்ஷித், றமீஸ் அப்துல்லாஹ், இன்னுமான கவிதைத் தோழர்கள் உமா வரதராஜன், ஜே. பிரோஸ்கான், சஜாத், நஸ்புல்லாஹ், முஜாரத், நாஸிக் மஜீத், அலறி, றியாஸ் குரானா, ஏ.கே. காமிஸ் கலீஸ், நவாஸ் சௌபி, அறநிலா, அல்ஜ், டீன்கபூர், பி.எம்.எம்.ஏ. காதர், ஏ.எம். அமானுல்லாஹ், ஹம்ஸா மஜீட், சம்ஸ் பாஹிம், சகோதரர் சமட், ஜவாத், தம்பி கபீல், அன்சார், மலீக், மைத்துனர் நௌபாஸ், மகன் முயீஸ் அபாம், விஷேடமாக என் இணை நௌஸிலாவிற்கும் சொல்ல மறந்தவர்களுக்குமாக..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சொற்களில் நிரம்பி வழியும் குழந்தைகளின் புன்முறுவல்

ஜமீல்

குழந்தைகளின் வானத்தில் விண்மீன்களாய்ப் பூத்துக் குலுங்கி பிரகாசமாய் மின்னி ஒளிரவும் சிறார்களின் அடர்வனங்களில் சிறு பட்சிகள்போல் அலாதியாக பறந்து திரியவுமே அவாவுகிறது புன்முறுவல் பூத்த எனது சொற்கள்.

அநாதரவாய் கைவிடப்பட்ட சிறார்களின் அரவணைப்பாக பெரும் ஆறுதலாக இருக்கும் இனிமையானதும் கழிவிரக்கம் கொண்டதுமான எனது சொற்கள் அவர்களது பிணக்குகளை முரண்பாடுகளை களைந்து செப்பனிடுவதோடு வாழ்வியலின் நெருக்குதல்களை அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சுகளை மிக இலகுவாக அவிழ்த்தும் விடுகிறது.

மேலும், அவர்களது சித்திரங்களில் சிறுநதிபோல் பாய்ந்தோடும் எனது சொற்களின் பகட்டு நிறங்கள் அவர்களின் கண்களைப் பறித்து பரவசத்தில் ஆழ்த்தியும் விடுகின்றது.

சிறார்களின் கனவுக் கோப்பைகளுக்குள் நிரம்பி பீறிட்டு வழியும் பழுத்த எனது மதுச்சுளைகள் அவர்களது அவலங்களை எடுத்துரைப்பதோடு துணிச்சல் மிக்க குரலாகவும் ஒலித்து விடுதலையையும் பாடுகிறது அல்லது முன்மொழிகிறது.

துயர்கவியும் பாடல்களோடு தனித்தலைந்து திரிந்து உடையக்காத்திருந்த பின்னரான ஒரு வசந்த காலத்தில் குழந்தைகளுக்காகவும், சிறுவர்களுக்காகவும் காற்றை அழைத்துச் சென்று குதூகலித்த மட்டில் மீளவும் அவர்களுக்காக தாளில் பறக்கும் தும்பியாகிப் பறக்கின்றன எனது சொற்கள்.

01.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப்பூச்சிகளினாலான உலகை வரைகையில் வழிந்தொழுகும் சொற்களின் வசீகரம்

**முல்லை முஸ்ரிபா**

சிறகு — 01

கவிதை தோன்றிய காலம் முதல் அதன் முழு அர்த்தத்துடனும் உந்து விசையுடனும் செயல்வாதம் புரிந்து வந்திருக்கின்றதா? என்ற ஐயப்பாடு இருந்தே வந்திருக்கிறது. ஆயினும் கவிதை என்கிற உணர்வு, லயிப்பு, சிந்தனைக் கிளர்வு அல்லது மனசின் அடியில் மண்டிக் கிடக்கும் உந்துதல் அல்லது குரல் நீத்தவர்களின் குரல், தன்னளவில் காலம் முழுவதுமாக நிகழ்த்தி வந்திருக்கிற அற்புதம் அலாதியானது.

காலத்தின் இடைப்புகுந்து வாழ்வின் குறுக்கும் நெடுக்குமான கோடுகளிடை அலைந்து காலத்தையும் அதன் ஜீவிதத்தையும் சாறு பிழிந்து தரும் கவிஞனின் செயல் வியர்வை சிந்தலுக்கும், ரத்தம் சொட்டுதலுக்கும் சிறிதும் குறைவற்றது. தீராத் தாகமும், தீராப் பருகலும், தீராக் கவிதையுமாக காதல் கொண்டலையும் கவிஞன் தன் உணர்வுகளின் கேவலை சொல் எனும் மந்திரக் குமிழில் அடைத்து ஒளிரவிடும்போது உலகும் சிலிர்க்கிறது. சிலிர்க்கும் அத்தகைய உலகுகளில் அதி விசித்திரமானது குழந்தை உலகு. அது வண்ணத்துப்பூச்சிகளிலாலான சித்திரங்களினால் ரசிப்பூட்டப்படுவது.

சிறகு — 02

வண்ணத்துப்பூச்சிகளிலாலான இந்த உலகு உளவியல் பூர்வமானது. இதன் மீதான உடல் வளர்ச்சி, இயக்க வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, அறிவு மற்றும் சமூக வளர்ச்சி மீதும் மாஸ்லோ குறிப்பிட்டது போல சுய திறனியல் நிறைவு, கணிப்பு, அன்பும் பாசமும், சுதந்திர உணர்வு மற்றும் காப்புத் தேவைகள் மீதும் கவனக் குவிப்பு அவசியமாகிறது. குழந்தை உலகினது தேடலுக்கும் திரட்டூக்கம், ஆராய்வூக்கம், ஆக்கவூக்கம், பணியூக்கம் உள்ளிட்ட மக்டூதலின் இயல்பூக்கங்கள் மீதும் அவற்றின் மீதான மனவெழுச்சிகள் மீதுமான நோக்கவுடைமை கட்டாயமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்லோ, ஸ்கின்னர், தோண்டைக் போன்ற நடத்தைவாதிகளின் குழந்தை உலகு பற்றிய கருத்தாக்கங்கள் மீதான கருமமும் முக்கியமானது. பியாஜேயின் உளவளர்ச்சிப் பருவங்கள் மீதான நுண்ணிய பார்வை வலுப்பெறவும் வேண்டும். புலனியக்கம், தூய சிந்தனை அதற்கு முற்பட்ட நியம சிந்தனைப் பருவங்களும், அப்பருவங்கள் மீதான குழந்தை நடத்தைக் கோலங்கள் மீதான அக்கறைப்பாடும் வளர்ந்தோர் உலகுக்கு முக்கியமானது. எனினும் குழந்தை உலகு மீதான கட்டமைப்பு இன்று எவ்விதம் அணுகப் பெறுகிறது என்பது பெரும் கேள்வியாக உள்ளது. குழந்தை உலகு புறக்கணிக்கப்படும் இடத்திலிருந்து ஜமிலின் சொற்கள் செயற்படத் தொடங்குகின்றன.

*சிறகு — 03*

ஜமிலீன் மூளையும் மனமுமான சொற்கள் குழந்தைகளிலாலான உலகை வண்ணத்துப்பூச்சிகளைப்போல் வலம் வருகின்றன. ஜமீல் தனக்கான தனித்துவமான கவிதை வெளியை வானமாக்கி அதனிடத்தில் சொற்களுக்கு சிறகு கட்டி தும்பியாக்கி விடுகிறார். அவை இடையறாத பறத்தலை தொடர்ந்தவண்ணமாயும் உள்ளன. புதிய இலைகளாய்த் துளிர்க்கும் வண்ணத்துப்பூச்சியாய் பறத்தல் தொடங்கி குழந்தை உலகில் "நிழல்" கொள்கின்றன.

ஜமீலின் சொற்கள் சிலபோது அவரது சிறு பராயத்தில் முளைவிடுகின்றன. நினைதலை அள்ளிப் பூசி அழகுபார்க்கின்றன அல்லது அவஸ்தைகளில் மூழ்கி துயரிக்கின்றன. அச்சொற்கள் குழந்தைகளுக்குள் வெளிப்பட்டு மற்றவர்மேல் அறைந்து கூறுகின்றன அல்லது சிலிர்த்துரைக்கின்றன. அதே சொற்கள் அஃறிணைகளிலிருந்து சிறுவர்களை நோக்கி எழுகின்றன. சிலபோது இயற்கையின் மீதமர்ந்து குழந்தைகளை ரசிப்பூட்டுகின்றன அல்லது துயர்கவியச் செய்கின்றன. இப்படித்தான் பெரும்பாலான ஜமீலின் சொற்கள் தாளில் பறக்கும் தும்பியாய் நமக்குள் துளிர்க்கின்றன.

சொற்களுக்கிடையில் அல்லது சொல்லுக்குச் சொல் சிறுமி, சிறுவன், பிள்ளை, குழந்தை, சிறுபராயம், பேத்தி, ஹயா, சரீன், பொம்மை என்பதான ஒற்றை அர்த்தச் சொல்லடுக்குகள் குவிமையப்பட்டு நிற்கும் அழகியலுக்கு அப்பாலான அர்த்தப்பாடு சொல்லும் செய்திகள் முக்கியமானவை. வெளிவருவதற்குத் தன்னை விசையுடன் உந்திக்கொண்டிருக்கும் உணர்ச்சியின் அடியாகத் தோன்றும் பொருளழகும் ஜமீலின் சொற்களுக்குள் விரவிக் கிடக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணத்துப்பூச்சிகளினாலான சித்திரங்களை அள்ளிப் பருகும் சிறுமியின் கண்கள், வண்ணத்துப்பூச்சிகள் நசிந்து செத்திடும் எனப் பதறும் குழந்தையின் கழிவிரக்கம், விரல்களில் சிக்காமல் எத்தம் காட்டும் வண்ணத்துப்பூச்சியின் ஏமாற்றம், உடைந்து சிதறும் குழந்தையின் கனவு மாளிகை, குழந்தைகளையே ரசிக்க அவாவும் பொம்மைகள், குச்சிமிட்டாய் நுணைக்கும் குழந்தையின் நுண்புத்தி, மீன்குஞ்சுகளை அள்ளி ரசிக்கும் சிறுவனின் ஜீவகாருண்யம், விண்மீன்களாய்ப் பூத்து பெருக்கெடுக்கும் சிறுமியின் வாய்பிழந்த சிரிப்பு, முந்திரியப் பழக் கொன்னைகளுடன் கெஞ்சும் சிறுமியின் ஆயிரத்தெட்டு அவலமும் பெருந்துயரும், கூண்டில் அடைக்கப்பட்ட காட்டுப் பறவை மீதான குழந்தையின் இரக்கம், பொம்மைகளை உப்பு மூட்டை தூக்கி மனமாறும் குழந்தையின் கொதிப்பு என குழந்தை உலகு மீது ஜமீலின் •சொற்கள் நெடுந் தவிப்புறுகின்றன.

என் குழந்தைப் பராயத்தில் | அதீத விருப்போடு | வாப்பா வாங்கி வந்த கரடி பொம்மை | உடைந்துவிடும் என்று சொல்லி | சுண்டிப் பறித்து | கண்ணாடி அலுமாரியில் வைத்தாள் உம்மா | என் பிஞ்சு மனது | உடைந்து சிதறுவது பற்றி | சற்றும் உணராத ஏதோ ஒன்றைப்போல | எனக்கு மீசை முளைத்த பின்பும் | அங்காடியில் இருந்தாற் போல் | இன்னும் அப்படியே புத்தம் புதிதாய் இருக்கிறது | யாரேனும் ஒரு குழந்தை | தன்னோடு விளையாட வரமாட்டார்களா | எனும் இருபது வருடத் தவிப்போடு.

ஜமீலின் சொற்கள் குழந்தையின் விரல் நுனி பிடித்து துள்ளிக்குதிக்கும் மழையாக ஒரு பாட்டம் பெய்து ஓய்கின்றன. ஓய்ந்தாலும் மனதுக்குள் தூறலாகி, தூவானமுமாகி பெருக்கெடுப்பு நிகழ்கிறது.

சிறகு — 04

ஜமீலின் சொற்களில் துளிரும் உத்திகள், செட்டு, மொழி லாவகம் என்பனவும் அவதானிப்புக்குரியன. அவை முற்றுருவப் பாங்கினை அல்லது விவரணப் போக்கினை நுட்பமாக வெளிப்படுத்துகின்றன. கவிதைக்குள் நுரைக்கும் கவிதையினை காட்சிப் படிமமாக வாசகர் மனதில் திரையிடுகின்றன. ஜமீலின் குழந்தை உலகில் மட்டுமன்றி மற்றைய உலகிலும் இதனைக் காணமுடிகிறது.

குழந்தையின் கனவைக் குடித்த மழை, உம்மாவின் பேத்தி, சொர்க்கத்தில் சஞ்சரிக்கும் சிறுவன் உட்பட சௌதா வாப்பம்மாவின் வாசலுக்குச் செல்லும் சருகுகள், மூத்தப்பாவின் அறை முதலியவற்றில் முற்றுருவத்தைக் காண முடிகிறது. ஜமீலின் சொற்கள் பல இடங்களில் குறியீடுகளாய் வெளிப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் என் மரத்தில் துளிர்த்துக்கொண்டிருக்கும் சிறு பராயம், காட்டுக் கிளியின் பூர்வீகத்தின் வரைபடம், தேவதையின் சித்திரம், உள்ளிட்ட கவிதைகளில் எனக்குள்ளும் குறியீடுகள் தோன்றுகின்றன.

ஜமீலிடம் வண்ணத்துப்பூச்சிகளும், பறவைகளும், மரங்களும், பொம்மைகளும், குழந்தைகளும் என சொற்கள் அதிகமதிகம் இருப்பதனால் திரட்டாக வாசிக்கும்போது திரும்பத் திரும்ப அவை வந்தமைகின்றன. சிலபோது சொற்கள் செறிவற்று கட்டிறுக்கம் நொடிந்தமைபோல் தோற்றம் காட்டுகின்றன. எனினும் தனித்தனிக் கவிதைகளாய்ப் பார்க்கும்போது அவை சொல்லும் செய்திகளும், எழுப்பும் அதிர்வுகளும், காட்டும் அழகியல் ஈர்ப்பும் வெவ்வேறானவை என்ற வகையில் ஒற்றைக்குள் சுழலும் சொல்வரட்சி என்ற எல்லைப்பாடு தாண்டிய கவித்துவம் நுரைப்பதை அவதானிக்க முடிகிறது.

சிறகு — 05

குழந்தை உலகு குறித்த எழுத்துகளுக்கு தமிழில் நீட்சியான வரலாறு இருக்கிறது. பாரதி வழிகடந்தும் தொடரும் இந்நீட்சியில் சிறுவர்களுக்கென சந்தம் கொண்டமைந்த பாப்பா பாட்டுப் பாடும் மரபை உடைத்துக் கொண்டு சிறுவர் பற்றிய பிரச்சினைகளை மையமாய்க் கொண்டமையும் எழுத்து முறையொன்று இன்று ஈழத்திலும் வீச்சடைந்து வரும் சூழலில் அத்துறையின் மிக முக்கிய புள்ளியாக ஜமீல் தெரிகிறார் என்பதனால் அவரது கவிதைகள் மேலும் அவதானிப்புக்குள்ளாகின்றன.

சிறகு — 06

குழந்தைகளினாலான உலகை வரையும் ஜமீலின் சொற்கள் தனித்தலையும் பறவையின் துயர்கவியும் பாடல்களாய் கருக்கொண்டு உடையக் காத்திருந்து காற்றை அழைத்துச் சென்றவர்களோடு முகிழ்ந்து தாளில் பறக்கும் தும்பியாய் துளிர்க்கின்றன. அவை அடர்வனமாகி, சிறு நதியாகி, பறவையுமாகி மேலும் எல்லாமுமாகி, கவிதையுமாகிவிடுகின்றன.

ஜமீலின் சொற்கள் மேலும் உயிர்க்கட்டும்.

*2015.03.22*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த புல்வெளி...

புதிய இலைகளாய்த் துளிர்க்கும் வண்ணத்துப்பூச்சி — 01□ அம்புலியை ரசித்த பறவை — 02□ கொல்லப்படும் பென்சில்கள் — 03□ சொற்களை வடிகட்டாமல் அருந்தும் குழந்தைகள் — 04□ குழந்தையின் கனவைக் குடித்த மழை — 05□ கள்ளச்சாட்டு அல்லது அலாதி — 06 பொம்மைகளின் காலம் — 07□ அழகில் ஒழிந்திருக்கும் வன்மம் — 08□ உம்மாவின் பேத்தி — 09□ விடுமுறை பற்றிய கனவு — 10□ குழந்தைகளின் அதரங்களில் கரைந்தொழுகும் ஆகக் கூடிய புன்னகை — 11□ முந்திரியப்பழக் கூடைக்குள் உறையும் சிறுமியின் பெருந்துயர் — 12□ எப்போதும் என் மரத்தில் துளிர்த்துக் கொண்டிருக்கும் சிறு பராயம் — 13□ நினைவைத் தின்ற பிள்ளை — 14□ வானத்தை சிதைத்த பறவை — 15□ கடமை ஒழுகும் குழந்தை — 16□ பெருவனத்தைக் காப்பாற்றிய மேகம் — 17□ றகுமத்தும்மா — 18□ சிறுவனின் மழையைக் கொத்திச் சென்ற பறவை — 20□ புத்தி — 21□ தப்பித்தல் — 22□ கண்ணாடிக் கோப்பைகளில் சிந்திக்கிடக்கும் மனது — 23□ பிரபஞ்சம் பற்றிய பாடல் — 24□ சிறுமியை அழவைத்த மருதாணி — 25□ மழையும் குழந்தையும் — 26□ வாழ்தலின் உயிர்ப்பைப் போதித்த தெருநாயின் மரணம் — 27□ குழந்தைகளை ஒளிரவைக்கும் இனிப்பு — 29□ சௌதா வாப்பம்மாவின் வாசலுக்குச் செல்லும் சருகுகள் — 30□ குழந்தையின் களிவிரக்கம் — 31□ சொற்களில் விரவிக் கிடக்கும் நெருஞ்சிமுள் — 32□ குழந்தைகளைக் கனிய வைக்கும் மழை — 33□ கிளிக்குப் பிடித்த குழந்தையும் குழந்தைக்குப் பிடித்த பொம்மையும் — 34□ அதிகாரம் பற்றியதான பாடல் — 35□ குழந்தைக்குப் புரிந்த பறவையின் மொழி — 36□ குழந்தையின் ஆன்மாவைப் பிழியும் பாடல் — 37□ விழலுக்கு இறைத்த நீர் — 38□ வழி தப்பி அலைதல் — 39□ சொர்க்கத்தில் சஞ்சரிக்கும் சிறுவன் — 40□ ஈரமற்ற நிலம் — 41□ நெடுந்தவிப்பு — 42□ தேவதையின் சித்திரம் — 43□ ஊசித்தும்பிகளின் சிரிப்பை துளித்துளியாய் பருகும் பிரம்பு — 44□ மூத்தப்பாவின் அறை — 46□ சிறுவனின் கனவை அறுத்துச் சென்ற காற்று — 47□ பேரூந்து தரிப்பிட கழிவறை — 48□ அலாதியாய் மல்லுக்கட்டும் பூனைக் குட்டிகள் — 49□ முற்றத்து வேம்பு — 50□ குருத்து மணல் கனவுகள் — 51□ பூச்சாண்டி அல்லது பயமுறுத்தும் சொல் — 52□ காணாமல்போன பொம்மை கிடைத்த போது — 53□ எனது மறைவான சொற்களும் சில தெருநாய்களும் — 54□ புள்ளைப் பூச்சியைத் தனகும் பூனைக்குட்டி — 55□ சப்பாத்து பற்றிய பாடல் — 56□ தனது பராயத்தை வாசிக்க அவாவும் சிறுவன் — 57□ பசுந்து மூத்தம்மாவின் நாவமரம் — 58□ மூங்கில் காடுகளைத் தேடிச் சொல்லும் சொற்கள் — 59□ காட்டுக் கிளியின் பூர்வீகத்தின் வரைபடம் — 60□ அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சு அல்லது நெடும் புதிர் — 61□ தனது பிறவிப் பயனை அடைந்த மரம் — 63□ வரலாற்றை மறந்த தோட்டிப் பறவை — 64□ கள்ளப்பட்ட பறவைகள் — 65□ மண் விழுங்கிய ஊர் — 67□ நான் கடல் — 68□ ஊஞ்சல்களில் தொங்கித் தவிக்கும் குழந்தைகளின் மனம் — 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளில் பறக்கும் தும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய இலைகளாய் துளிர்க்கும் வண்ணத்துப் பூச்சி

வெயிலை அள்ளியெறியும்
நெடுங்கோடைத் தகிப்பில்
சருகுகள் கூட்டி அலுத்தமட்டில்
வெட்டியெறியப்படுகிறது
முற்றத்துக் கொய்யா மரம்

எறியப்பட்ட கொய்யா மிலாறு
நாலைந்து தினங்கள் கழித்து
மீண்டும் துளிர்த்துக் கிடப்பதாக
ஆச்சரியப்பட்டுச் சொன்னாள் சிறுமி

சிறுமியின் பேச்சை நம்ப முடியாமல்
வெளியே வந்து பார்த்தேன்
கொய்யா மிலாறுகள் முழுவதுமாக மொய்த்திருந்தது
வழிதப்பி வந்த வண்ணத்துப் பூச்சிகள்

இப்போது சருகுகளுக்குப் பதிலாக
வண்ணத்துப் பூச்சிகளின்
பல நிறங்களினால் வரையப்பட்டிருக்கும்
சித்திரங்களைக் கண்களால் அள்ளுகிறாள் சிறுமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலியை ரசித்த பறவை

பனிப்பொழியும் பின்னிரவில்
ஏரிக்கரை நோக்கி
இரைதேடித் தன் சிறகை விரிக்கிறது
ஒரு புலாலுண்ணிப் பறவை

வெட்டிப் பிழந்த பூசணி போல்
ஏரியில் விழுந்து கிடக்கிறது
பறவை அனேக தருணங்களில்
முத்தமிட நினைத்த அம்புலி

பழுத்தொழுகும் அம்புலியின்
இளமஞ்சள் ஒளி
ஏரி முழுவதுமாக ஊத்துண்டு விரவிக் கிடக்கிறது

கண்ணாடிக் குளத்தில் மீன் குஞ்சுகள்
பாம்பு தவளைகளை மறுக்கித் திரிவது
மீன்கொத்தியின் கண்களுக்கு புலப்படாமலில்லை

இருந்தும் தன் பசியை ஆற்ற
மீன் குஞ்சுகளைக் குறிவைத்து முங்கினால்
அம்புலி நொறுங்கிவிடலாமென நினைத்து
அதன் அழகை விடிய விடிய ரசித்தது பறவை

எதற்கும் மழை முடிச்சுகள்
இப்போதைக்கு அம்புலியை
மறைக்காமல் விட்டால் சரிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லப்படும் பென்சில்கள்

முன்பள்ளி வகுப்பறைக் கரும்பலகைகளில்
பூதக் கண்ணாடியில் தெரிவதைப்போல்
மிகவும் எளிதாக எழுதப்பட்டிருக்கிறது
காற்றாடி, ஆகாயம், விண்மீன்களென
ஒன்றிரண்டு சொற்கள்

அச்சடித்தாற்போல் எழுதப்பட்டிருக்கும் சொற்களை
மின்கம்பியில் தலைகீழாய் தொங்கும்
இராட்சத வௌவால்போல்
எழுதிக் கிழித்தனர் சிலர்

மேலும் சிலரது எழுத்துக்கள்
வளைந்து நெளிந்து செல்லும்
மண்புழுக்கள் மாதிரி
தாள் முழுதுமாக ஊர்ந்து திரிந்தன

மாணவர்கள் சொற்களைப் பிரதி பண்ணி
முடிக்கிறார்களோ இல்லையோ
பென்சில்களைத் தீட்டி முடிப்பதில்
கடும் குறியாய் செயற்படுகிறார்கள்

ஆயிரத்திற்குமதிகமான சொற்களை
எழுதிக் குவிக்கும் புத்தம்புதிய பென்சில்களானது
நாலைந்து சொற்களை எழுதி முடிப்பதற்குள்ளாக
பத்துப் பதினைந்து தடவைகள் தலைசீவப்பட்டு
தினமும் முன்பள்ளி வகுப்பறையில் கொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களை வடிகட்டாமல் அருந்தும் குழந்தைகள்

வீட்டு முன்றலில்
பூட்டிய அறைகளில்
பொது வெளிகளில்
பெருக்கெடுக்கின்றன சொற்கள்

வழிந்தோடும் சொற்களை
கிளறி வடிகட்டாமல் அள்ளிப் பருகி
தங்களது கதைத் தாகத்தை
ஆற்றுகின்றன குழந்தைகள்

அச்சொற்களில் உறைந்திருக்கும்
அழுக்காறுகளை
அபத்தங்களை
அபாயகரங்களை
மேலும் ஒழுக்கமற்ற தன்மைகளை
ஒருபோதும் அறிந்திருப்பதில்லை குழந்தைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையின் கனவைக் குடித்த மழை

கடற்கரை முற்ற வெளியில்
தன்னந்தனியாக உட்கார்ந்து
தனது கனவு மாளிகையை
தத்ரூபமாக செப்பனிடுகிறது குழந்தை

குழந்தையின் கற்பனையை ரசித்து
வியந்து சிலாகித்துப் பேசுகின்றன
அதுவழியே மேய்ந்து திரிந்த
சிறியதும் பெரியதுமான நண்டுகள்

நண்டுகளின் கண்பட்டதுபோல்
குழந்தையின் கனவு மாளிகையை
உடைத்துத் தரைமட்டமாக்குகிறது
திடீரென பெய்த அடைமழை

தனது மாபெரும் கனவு
ஒவ்வொரு அறைச் சுவராக
கரைந்தோடுவதைப் பார்த்து
கண் கலங்குகிறது குழந்தை

மழை சிறிது தணிந்து
ஊசித் தூறலாகப் பெய்கையில்
குழந்தை ஆசையாசையாய் கட்டிய வீட்டை
உடைத்த குற்ற உணர்வில்
குழந்தையோடு சேர்ந்து அழுகிறது மழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளச்சாட்டு அல்லது அலாதி

சிறகுகள் பிடுங்கப்பட்டபடி
கூண்டில் அடைபட்டிருக்கும் பறவைகள்போல்
முன்பள்ளி வகுப்பறைகளில்
சிறைபட்டுக் கிடக்கிறார்கள் மாணவர்கள்

அவ்வாறு அடைபட்டிருக்கும் மாணவர்கள்
பறவைகள்போல் தனது அடர்ந்த காடுகளை
மரப்பொந்துகளை பூர்வீக நிலங்களை
தினமும் தரிசிக்கவே அவாவுகிறது

சிறுநீர் கழிக்கவும் நீர் அருந்தவும்
பென்சில் அழிரப்பர் வாங்கவும்
கள்ளச்சாட்டுகள் சொன்னபடி
வண்ணத்துப்பூச்சிகள் மாதிரி
அடிக்கடி வெளியே சென்று
அலாதியாகப் பறந்து திரியவே
முண்டியடிக்கிறார்கள் மாணவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொம்மைகளின் காலம்

பொம்மைகளாய் இருப்பதனால்தான்
நிறங்களை ரசிப்பது போன்று
குழந்தைகள் பொம்மைகளை விரும்புகிறது

அதிலும் அஃறிணை பொம்மைகளோடுதான்
அதிகமதிகம் ஊடாடுகிறது
அன்றி நேசிக்கிறது குழந்தைகள்

பொம்மைகளால் மட்டும்தான்
குழந்தைகள் மீட்கும்
எல்லா இசைகளுக்கும் சோர்வின்றி
ஆடவும் பாடவும் முடிகின்றது

மேலும் வெளியே சென்ற குழந்தைகள்
திரும்பி வரும்வரைக்கும்
பொம்மைகளால்தான் வருடக்கணக்கில்
ஒரே அறையில் காத்திருக்க முடிகிறது

குழந்தைகளற்ற வீடுகளை
பேய்கள் நிறைந்த மண்டபமாக
மயானமாக கருதுகிறது பொம்மைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகில் ஒழிந்திருக்கும் வன்மம்

உலகினது அழகின்
அநேக ரகசியங்களை
தனக்குள் பதுக்கி வைத்திருக்கும்
கடல். நதி, குளம்,
காடு, மலை, பள்ளத்தாக்குகளை
நாம் என்னதான் ஆழ்ந்து ரசித்து
வியந்து பேசினாலும்
அங்கும் மனிதர்களைப் போன்று
பலமுள்ளவர்கள் பலமற்றவர்களை
பிடித்து விழுங்கி வாழும்
ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உம்மாவின் பேத்தி

கைகால்கள் முளைத்த
நிலாப் பிஞ்சு மாதிரி
வெள்ளை முயல் குட்டிபோல்
துள்ளித் திரிகிறாள் மகள்

உம்மாவின் அந்தி வெயில்
குழைத்துப் பூசிய நிறமும்
வாப்பம்மாவின் நாவப்பழக் கண்களையும்
கிளிச் சொண்டு மூக்கினையும்
அச்சில் வார்த்ததுபோல் கொண்டிருக்கிறாள் ஹயா

கண்களை உருட்டி உருட்டி
ஒரே சொல்லை நாலைந்து தடவைகள்
விடுத்து விடுத்து பிதற்றுகையில்
என் உம்மாவின் சாயலைக் கொண்டிருப்பதாக
வாய் நிறையக் கூறிச் செல்வார்கள்

வாப்பம்மாவைப் பற்றி விசாரிக்கும்
அநேகமான தருணங்களில்
சுவிங்கியமும் சொக்லட்டும் வாங்கிவர
அல்லாஹ்விடம் சென்றிருப்பதாக
கிளிப்பிள்ளைபோல் சிரித்தபடி சொல்வாள்
மரணம் பற்றி அறியாத உம்மாவின் பேத்தி.

குறிப்பு : இது எனது உம்மாவிற்கும் மகள் ஹயாவிற்குமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுமுறை பற்றிய கனவு

முன்பள்ளி வகுப்பறைகளில்
சிறியதும் பெரியதுமாய் வரையப்படுகிறது
விடுமுறை பற்றியதான ஒருதொகைக் கனவு

வரையப்பட்ட கனவு முடிச்சுகளோடு
ஊசித்தும்பிகள் மாதிரி பறந்து
மிக அலாதியாக வீடு சென்ற மாணவர்களை
குட்டி ஆடுகளைப் போல் சாய்த்து
மாலை நேர வகுப்புக்கு விரட்டினார்கள்

மீண்டும் புத்தகப் பைக்குள் சிக்கி
நசிந்து செத்துப்போகிறது
காடு மலை அருவி
கடல் நதி தீவுகளென விரியும்
மாணவர்களது விடுமுறை பற்றிய கனவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் அதரங்களில் கரைந்தொழுகும் ஆகக்கூடிய புன்னகை

சொர்க்கத்து அமுதம் போன்று
தெவிட்டாது குளிரகழி
விரும்பிச் சுவைக்கிறது குழந்தைகள்

ஆடைகளில் கரைந்தொழுகியபடி
குழந்தைகள் குளிர்கழி சாப்பிடுவது
கண்ணைப் பறிக்கும் வானவில் மாதிரி
பார்க்க கொள்ளை அழகு

பசியில் அழும் தருணங்களில்
குளிர்கழி சாப்பிடக் கொடுப்பது
கிளிக் கூட்டங்களுக்கு
முந்திரியம் காடுகள் பரிசாகக் கிடைத்ததுபோல்
குழந்தைகளின் காட்டில் அடைமழை

குளிர்கழியினது சுள்ளென்ற சுவைபற்றி
குழந்தைகள் ஒருபோதும்
பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை
தவிரவும் சுவைத்து முடிப்பதற்குள்ளாக
காற்றில் உருகி சிந்துவது பற்றியே
கவலை கொள்கிறார்கள் குழந்தைகள்
தன் சின்னி விரலில் பூத்திருந்து பறந்துபோன
வண்ணத்துப் பூச்சியை நினைந்து கரைவதுபோல

இருந்தும் குளிர்கழி சாப்பிடுவதற்கென்றே
பெற்றோர்களை அழுதடம்பிடித்து
அங்காடிக்கும் கூட்டக்கரைகளுக்குமாக
அழைத்துச் செல்கையில்
குழந்தைகளின் அதரங்களிலிருந்து
கரைந்தொழுகுகிறது ஆகக்கூடிய புன்னகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்திரிகை பழக் கூடைக்குள் உறையும் சிறுமியின் பெருந்துயர்

கலப்பு நிறங்கள் அள்ளிப் பூசப்பட்ட
பெற்றிக் துணி மாதிரி
தெருக்களின் கண்ணைப் பறிக்கிறது
சிறுமியின் முந்திரியம் பழக் கூடை.

முந்திரியம் பழங்களில் அப்பியிருக்கும்
அதீத பின்னல் நிறங்களைப் போல்
சிறுமியின் முகத்தில் இளையோடிக் கவிந்திருந்தது
ஒரு பொழுதுக்காகப் போராடும்
ஆகக் கூடியபட்ச தழும்புகள்

ஒரு புத்தகப் பையை வாங்குவதற்காக
அன்றி மிகவும் அவசியமென்றான
ஏதேனும் ஒன்றுக்காக முந்திரியம் பழக் கூடைகளை
அவள் ஏந்தி வந்திருக்கக் கூடும்
கொதி மண்ணில் வறுபட்ட பாதங்களோடு

காய்ந்த ஈர்க்குகளில் குத்திவிடப்பட்டிருக்கும்
முந்திரியம் பழக் கொன்னைகளை
வாங்கச் சொல்லிக் கெஞ்சும்
சிறுமியின் இரங்கலில் வழிகிறது
ஆயிரத்தெட்டு அவலங்களும் பெருந்துயரும்

இருந்தும் எனது அச்சமெல்லாம்
தனித்த ஒரு சூழலில்
இந்த முந்திரியம் பழத்தின் உயிர்ப்பை
யாதேனும் ஒரு காட்டுக் கிளி
தனது கூர்மையான சொண்டுகளால்
கொத்திச் சிதைத்து வன்புணரலாம் என்பதுபற்றியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதும் என் மரத்தில் துளிர்த்துக் கொண்டிருக்கும் சிறு பராயம்

எப்போதும் என் மரக் கிளைகளில்
துளிர்த்துக் கொண்டிருக்கிறது
என் ஆரணியப் பராயம்
அது மிகவும் அலாதியானதும் கூட.

மீண்டும் சிறுவனாகிக் கரைகிறேன்
கடும் பச்சை மஞ்சள் நிறங்களை
அள்ளிப் பூசியிருந்தது ஊர்
சாலைதோறும் சிறு நதியாக
ஓடிக் கொண்டிருந்தது நிழல்

ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள்
எனக்குள் சிறகடித்துப் பறந்தது
இந்த நுங்குப் பராயத்தில்
நிரந்தரமாய் தங்கிச் சாக
மனம் அவாவில் பிராத்திக்கிறேன்

காற்சட்டை அணிந்த வகுப்புத் தோழர்கள்
அடைமழைபோல் வந்தார்கள்
ஆத்துமேடு, நவியான் குளம்,
மேட்டுவட்டை, ஒல்லிக்கேணியென
விரல் பிடித்து அழைத்துச் சென்றார்கள்
ஈற்றில் நானே அடர்வனமாகி
சிறுநதியாகி பறவையுமாகி
மேலும் எல்லாமுமாகினேன்

நெடியடிக்கிறது கோடைப் புழுக்கம்
மீண்டும் முதுமைக்குத் திரும்பினேன்
கட்டிடக் காடுகளுக்குள் சிக்குண்டு
சிறு நிழலின்றி தவித்தலைகையில்
எனதூரை துளித் துளியாய் பருகிக்கொண்டிருந்தது
வாகனங்களின் புகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவைத் தின்ற பிள்ளை

முதுமை முட்டிப் பழுத்து
நினைவாற்றல் சற்றுத் தூர்ந்து போய்
சிறு குழந்தை மாதிரி
கிடையாய் கிடப்பில் கிடந்தார் வாப்பா
பிள்ளையின் அரவணைப்பை எதிர்பார்த்து

வாப்பாவை நலம் விசாரித்து ஆறுதல் பகிர்ந்தபடி
சிறுபராயத் துடினங்களை
சுவாரசியமாக மீட்டுச் செல்கிறார்கள்
பாலிய காலத்து நண்பர்கள்

விசாரித்துச் செல்லும் நண்பர்களை
உடன் அயத்த மட்டில்
ஒன்றுக்கு இரண்டு தடவைகள்
மீண்டும் யாரென்று விசாரித்த போது
வெட்டித் தின்பது போல்
வெறித்துப் பார்க்கிறான் பிள்ளை

இத்தனைக்கும் தனது குழந்தைப் பராயம்
தீர்ந்துபோகும் கடைசித் தருணத்திலும்
ஏதேனுமொன்றை காணுமிடத்து
அது என்னவென்று ஆயிரத்தெட்டுத் தடவைகள்
சுரண்டிச் சுரண்டி கேட்டபோதெல்லாம்
சிறிதும் மனம் சலிக்காமல்
கன்னத்தில் முத்தமிட்டபடி பதிலுரைத்த
அன்புமிக்க வாப்பாதான் என்பதை மீட்டுப் பார்க்க
நினைவைத் தின்ற அதே பிள்ளைதான் இவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்தை சிதைத்த பறவை

எவர் மிதித்தாலும் எவர் எறிந்தாலும்
எதுவுமே ஏசாமலும் பேசாமலும்
பருவமடைந்த ஒரு பெண்ணைப் போல்
தன் பாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது நதி

நதி முழுவதுமாக
மல்லாந்து கிடக்கிறது வானம்

நதிமீது தன் அலகினால்
ஒருமுறை அலம்பிவிட்டு
வானத்தைச் சிதைத்துவிட்டதாக
காடு மேடெல்லாம் கரைந்து
குரலெழுப்பித் திரிகிறது
அதுவழியாகச் சென்ற பறவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை ஒழுகும் குழந்தை

சாழவாய் ஒழுகிக் காய்ந்தபடி
மூக்கும் வழிந்து
மூத்திர நெடியோடு,
நிர்வாணமாய்த் திரிகிறது குழந்தை

உம்மாவின் கவனிப்பற்று
அருவருப்பாகத் திரிந்தாலும்
தனக்கு மிகவும் பிரியமான
குழந்தை பொம்மையினை
குளிப்பாட்டி பவுடர் பூசி அழகுபடுத்த
ஒருபோதும் நினைவைத் தின்பதில்லை குழந்தை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் வனத்தை காப்பாற்றிய மேகம்

இலையின் நுனியில் தொங்கும்
பனித் துளியில் குவியும் ஒளி
ஒரு பறவையின் கூட்டை
முதலில் தீக்கிரையாக்குகிறது

பின்னர் அதன் சுவாலை
ராட்சத சர்ப்பம்போல் ஊர்ந்து
மரத்தின் கிளைகளில் தாவி
பெரும் தீயாய் எரிகிறது

இதை கூர்ந்து கவனித்த மேகம்
உடன் தன்னைப் பிழிந்து
அடை மழையாகப் பெய்து
தீயை அருந்தி குடிக்கிறது

அடர் வனத்தை காப்பாற்றிய
மகிழ்ச்சிப் பிரவாகத்தில்
ஓடித்திரிகிறது நீலமேகம்
மீளவும் பனித்துளிகளை அவதானித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றகுமத்தும்மா

றகுமத்தும்மா உன் மரணமானது
என்னை மீளாத் துயரில் இட்டுச் சென்றுள்ளது
நின் இழப்பை நினைந்தழுகையில்
கொதிமண்ணில் கிடந்து சுருளும்
மண்புழு மாதிரி சுருள்கிறது மனம்

பூனை தன் குட்டியை
கவ்விச் செல்லும் போதும்
பசு தன் கன்றுகளுக்கு மடியை
விரித்துக் கொடுக்கும் போதும்
காகம் தன் குஞ்சுகளுக்கு இரையூட்டி
இறகை அலகினால் கோதிவிடும் போதும்
உன் ஞாபகம் மட்டுமே விரிகிறது

ஊசித்தூறல் மழைபோல்
எனக்குள் தூறிக்கொண்டும்
இதமான காற்றைப் போல்
நிதமும் வருடிக் கொண்டும்
சாந்தமான நதியைப் போல்
எனக்குள் ஓடிக்கொண்டுமிருக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பூக்களின் மீது
உறங்கும் பனித்துளி போலும்
பழுத்தொழுகும் நிலா மாதிரியும்
மிக அழகானவையெல்லாம்
நீயாகத்தான் ஒளிர்கிறாய் உம்மா.

முன்பள்ளி சென்ற கையோடு
உன் ஞாபகம் விரிந்ததும்
பள்ளியின் கண்களில் மண்ணைத் தூவி
ஒரு முயல் குட்டிபோல்
ஒழித்தோடி வந்தபோது
கொய்யாச் சுள்ளியால் கிசிக்கிய தழும்பு
இப்போது இனிக்கிறது உம்மா

தன் தாயை பறிகொடுத்து தவிக்கும்
குட்டி ஆடுபோலான என்னை
என்னதான் நீங்கள் ஆற்றுப்படுத்தினாலும்
இந்த தங்க உலகைத்தான் பரிசளித்தாலும்
என் உம்மாவினது இழப்பினை
எதனைக் கொண்டும் ஆற்றிட முடியாது
ஆயினுமாயினும் எனது உம்மாவின்
பசுமையான நினைவுகளில்தான்
அதிகமதிகம் கரைந்து கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனின் மழையைக் கொத்திச் சென்ற பறவை

சிறுவனின் விரல்களில் சிக்காமல்
ஒவ்வொரு புல்லின் நுனியாக தாவித் தாவி
எத்தம் காட்டுகிறது அல்லது தப்பித்து விடுகிறது
புல்வெளியை மேலும் அழகூட்டும்
தனி மஞ்சளப்பிய வண்ணத்துப் பூச்சி

சிறுவனும் வண்ணத்துப் பூச்சியின்
கண்ணைப் பறிக்கும் நிறத்தில் குழைந்து
சலிக்காமல் புல்வெளிக்குள் பதுங்குகிறான்
வண்ணத்துப் பூச்சியை பிடித்து விளையாடி
கிளிச்சொண்டு மூக்கில் உட்காரவைத்து முத்தமிட்டு
பின் பறத்தலின் அழகில் ரசித்துத் திழைக்க

எல்லாவற்றையும் சொதப்பியபடி
சிறுவனின் மழைப் பழத்தை
தனது அலகில் பறித்துச் செல்கிறது
பெருவெளியெங்கும் சிறு புழுவிற்காக
அலைந்து திரிந்த மாம்பழக் குருவி

இன்னுமொரு வண்ணத்துப் பூச்சி
புல்வெளிக்கு வரும் வரைக்கும்
அதீத நம்பிக்கையோடு காத்திருக்கிறான் சிறுவன்
இனி எந்த ஒரு பறவையும்
இதுவழியாக வரக்கூடாதென்ற அவாவுதலோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தி

நுனியும் யாருக்கும் பிசுகாமல்
தன்னந்தனியாக நின்றபடி
குச்சி மிட்டாய் நுணைக்கிறது குழந்தை

குச்சி மிட்டாய் தின்னும் குழந்தையை
சுற்றி வளைக்கிறது
இரை தேடிவந்த காகங்கள்

காகங்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள
குச்சி மிட்டாயை எறிந்து விட்டு
காகங்கள் மல்லுக்கட்டுவதைப் பார்த்து
ரசித்து நின்றது குழந்தை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பித்தல்

தினமும் புதினம் பார்க்க
ஏரிக்கரைக்கு ஒதுங்குகிறது
ஆயிரக்கணக்கான மீன் குஞ்சுகள்

ஒதுங்கும் மீன் குஞ்சுகளை
தன் பிஞ்சு விரல்களால் தனகி
உள்ளங்கைகளில் பிடித்து
தன்னை மறந்து ரசிக்கிறான் சிறுவன்

காலங் கரையக் கரைய
துளித் துளியாய் ஒழுகுகிறது நீர்
மீன் குஞ்சுகள் நீரின்றிச் சாகுமுன்
மீண்டும் ஏரியில் விடுகிறான் சிறுவன்

உயிரைப் பொத்திப் பிடித்தபடி
சல்லுக்குள் ஓடி ஒளிகிறது மீன்கள்
நாலைந்து பச்சைக் கொலைகளிலிருந்து
தப்பித்து விடுகிறான் சிறுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடிக் கோப்பைகளில் சிந்திக் கிடக்கும் மனது

புராதன ஓவியங்கள் வார்க்கப்பட்ட
கண்ணாடிப் பாத்திரங்களும்
தேநீர்க் கோப்பைகளுமாக
கண்கள் கூச வைத்தபடியாக
வரவேற்பு மண்டப அலுமாரியினுள்
தகதகத்து இலங்குகிறது

விருந்தாளிகள் வந்து செல்லும்
ஆடம்பரமிக்க தினங்களில் மட்டுமே
அது சாப்பாட்டு மேசைக்கு வந்து
எங்களது உதடுகளை முத்தமிடாமல்
மீண்டும் அலுமாரிக்குச் சென்றுவிடுகிறது

மூத்தம்மா அன்பளிப்புச் செய்திருந்த
பூச்சுக் கழன்று நிறமிழந்து போன
தொன்மையான பாத்திரங்களில்
உம்மா உணவு பரிமாறும் போதெல்லாம்
கைதவறி விழுந்துடைந்து சிதறும்
தேநீர்க் கோப்பைபோல் நொறுங்குகிறது மனசு

இன்னுமொரு விருந்தாளி வரும்வரைக்கும்
எங்களது தேநீர் முரடுகளும்
சோற்றுக் கவளங்களும்
கண்ணாடி அலுமாரியில் காத்திருக்கும்
பாத்திரங்களில் சிந்தத் தவறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபஞ்சம் பற்றிய பாடல்

வாழ்ந்து சலித்த மட்டில்
ஒளிரும் பிரபஞ்சத்தின் வனப்பை
குப்பைக் காடென்று வெறுத்து
ஒதுக்குகிறது ஒரு கூட்டம்

அவர்கள் ஒதுக்கும் உலகை
சொர்க்கமாக நினைத்து
தினமும் தரிசிக்க அவாவுகிறான்
ஓர் பிறவிக் குருடன்

விலைமதிக்க இயலா தங்க உலகை
தரிசித்துப் பார்க்கும்படியாக
தங்களது கண்களைப் பரிசளிக்க
ஒருபோதும் யாரும் முன்வருவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியை அழவைத்த மருதாணி

தெருமுனை சந்தி மருங்கில்
வெட்டி எறியப்பட்டுக் கிடந்தது
மருதாணி மரக் கிளைகள்

வாடிக் கிடக்கும் மருதாணி இலைகளில்
ஒரு பிடி உருவி அரைத்து
சிறுமியின் கரங்களில் பூசினேன்

மருதாணி சிவக்கும் முன்பே
புது ஆடை வாங்கிக் கேட்டு
அழுது சிவந்தாள் சிறுமி

சிறுமிக்குத் தெரிந்ததெல்லாம்
மருதாணி பூசிச் சிவந்துவிட்டால்
பெருநாள் என்பது மட்டுந்தான்

தவிரவும் நாலைந்து தினங்களாய்
அடுப்பங்கரையில் பூனை படுத்துறங்குவது
சிறுமிக்கு எவ்விதம் புரியும்

யார் வீட்டுக் குப்பையோ
என் வாசலில் எரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையும் குழந்தையும்

நெடுங்கோடைக்குப் பின்னராக
பெய்யும் முதல் மழையில்
ஒரு வாத்துக் குஞ்சு மாதிரி
நனைந்து தொப்பாகிறது குழந்தை

மெய் மறந்து குளிக்கும் குழந்தையை
வீட்டுக்குள் அழைத்து வந்த போது
மழையை ரசித்தபடி கூத்தாடிக் குளிக்கின்றன மரங்கள்
என ஆர்ப்பாட்டம் செய்து
மீண்டும் வெளியில் சென்று
மழையோடு மழையாகிறது குழந்தை
குழந்தையை ரசிக்கிறது மழை

எதற்கும் மழை ஓய்ந்து
மரங்கள் வெயிலில் காயும்போது
குழந்தையும் வெயிலில் காயப்போகிறேன்
என்று அடம்பிடிக்காமல் விட்டால் சரிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்தலின் உயிர்ப்பை போதித்த தெருநாயின் மரணம்

எங்கோ ஓர் புதரில் பிறந்து
எங்களது நகர்ப் புறத்தில்
எல்லோரிடமும் நெருக்கமாக வாழ்ந்து
பழகிப்போன தெருநாய்

இன்று காகங்கள் துயருற்றுக் கரையும்
மிக அதிகாலை
சாலை மருங்கில் வைக்கப்பட்டிருக்கும்
குப்பைத் தொட்டி அருகில்
தூக்கிப் புதைக்க நாதியற்று
குப்பையோடு குப்பையாய் செத்துக்கிடக்கிறது

தேநீர்க்கடை முன்றலிலும்
அடர்ந்த குப்பைக் காடுகளிலும்
கிடைத்தவற்றை தின்று களிப்புற்று
மர நிழல்களில் ஆழ்ந்து துயின்று
தன் காலத்தைக் கழித்த வாயில்லாப் பிராணியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தனது பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையில்
மிகச் சொற்பமாகவேனும்
குறிப்பிட்டுச் சொல்லும்படியாக
ஒரு விதையையும் புதைத்துச் செல்லவில்லை

இனிவரும் மழை நாட்களில்
இந்தப் பிராணி அலைந்து திரிந்தமைக்கான
சிறு புல்லும்
எனது தெருக்களில் முளைக்காது

எறும்புகளின் இலக்குகள் கூட அற்று
அநாதரவாய் செத்து மடிந்துபோன
இந்தத் தெருநாயின் மரணமானது
நமக்குள் வாழ்தல் பற்றிய
அனேக கேள்விகளையும் அவாவுதல்களையும்
உசுப்பிவிட்ட அதே தருணம்
உயிர்ப்பான வாழ்தலையும் போதனை செய்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகளை
## ஒளிரவைக்கும் இனிப்பு

நிலா எங்கோ தலைமறைவாகி
விண்மீன்களும் கண்சிமிட்டாத
இக்கோடை இரவில்
சொல்லாமல் போகிறது மின்சாரம்

காடுபற்றுகிறது இருள்
ஒளியை இறைத்திட தீக்குச்சி வாங்க
குழந்தையைக் கடைக்கு அனுப்பினேன்

சிறிது நேரம் தாமதித்து
கும்மிருட்டை விலக்கி
கைநிறைய இனிப்போடு வந்தது குழந்தை

குழந்தை வாய்வழிந்த சிரிப்பு
விண்மீன்களாய் பூத்து
வீடு முழுவதும் பெருக்கெடுக்கிறது ஒளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸெளதா வாப்பம்மாவின் வாசலுக்குச் செல்லும் சருகுகள்

காற்றின் தோள்களில் தொங்கி
ஸெளதா வாப்பம்மாவின் குடிசை முன்றலுக்கு
தினந்தோறும் செல்கிறது
என் கோடிப்புறத்து பலாமரச் சருகுகள்

அது கண்ணாடிபோல் தூத்திருக்கும்
பூனையின் தடங்களற்ற வாசலில்
இராட்சத வண்ணாத்துப் பூச்சிபோல்
ஆனந்தமாய்ப் பறந்து திரிகிறது
சிலது திண்ணையில் படுத்துறங்கும்
வாப்பம்மாவை அரட்டியெழுப்பி
தங்களோடு விளையாட அழைக்கிறது

குப்பைக் காடாகும் முற்றத்தைக் கண்டதும்
மூக்கு நுனிமேல் கோபம் பீறிட்டெழ
புழுத்து வழிகிறது வாப்பாம்மாவின் சொற்கள்
சருகுகளைக் கூட்டித் தீயிட்டு
அதில் என்னையும் தூக்கியெறிகிறாள்
அநாதரவான ஸெளதா வாப்பம்மா

நான் ஒருபோதும் காற்றிடம்
சருகுகளை அள்ளியெறியச் சொன்னதில்லை
காற்றின் குணம் தழுவிச் செல்வதும்
வேரோடு பிடுங்கியெறிவதுந்தான்
அதற்குப் பிரிவினைகள் பற்றி எதுவுமே தெரியாது
ஆகாயத்தில் தடங்களற்று பறந்து திரியும்
பறவைகளில் காற்றும் ஒன்று

இன்று காலையும் வாப்பம்மாவின் வாசலுக்கு
எனது சருகுகள் ஏராளமாய் சென்றிருக்கும்
அப்படிப் பலமாக வீசியது காற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் கழிவிரக்கம்

முன்பள்ளிப் புத்தகத்தில் தூக்கலாக
வரையப்பட்டிருக்கும் சிறு வனத்தில்
நிறங்களின் குவியல்களாய்
பறந்து திரிகிறது வண்ணத்துப் பூச்சிகள்

பறந்து திரியும் வண்ணத்துப் பூச்சிகளை
பிடித்து விளையாடி மகிழ
வனத்துக்குள் இறங்கிச் சென்று
சிறகு முளைத்துப் பறக்கிறது குழந்தை

வண்ணத்துப் பூச்சிகளின் நிறங்களோடு
பறந்து திரிந்து களைத்த மட்டில்
திரும்பி வருகிற குழந்தையின்
கண்களைத் தழுவுகிறது உறக்கம்

புத்தகத்தை மூடிவிட்டால்
சுதந்திரமாக பறந்து திரியும் வண்ணத்துப் பூச்சிகள்
நசிந்து செத்துவிடலாமென்று பதறும்
குழந்தையின் ஆன்மாவிலிருந்து
பீறிட்டு வழிகிறது கழிவிரக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்களில் விரவிக் கிடக்கும் நெருஞ்சி முள்

நாய் பன்றி கழுதையென
அருவருப்பான சொற்களைக் கொண்டே
நீங்கள் உங்கள் சிறார்களை
பச்சையாக அழைக்கிறீர்கள்

சிறு உறுத்தலுமின்றி
நீங்கள் குறிவைக்கும் ஒவ்வொரு சொல்லும்
அவர்களது இதயத்தைக் குத்திக் கிழிக்கையில்
கொடூரமான விலங்குகள் திரியும்
வனமொன்றில் வசிப்பது போலவே கருதுகிறார்கள்

உங்களது இரக்கமற்ற சொற்கள்
அவர்களது காதுகளில்
ஈயம் காய்ச்சி ஊற்றியதுபோல்
மனம் வெதும்பிக் குமைகிறார்கள்

மேலும் உங்களது நெருஞ்சி முள் சொற்களில்
அவர்களின் கள்ளங்கபடமற்ற குருத்து மணல் மனது
கைதவறி விழுந்துடையும் கண்ணாடிப் பாத்திரம்போல்
சுக்குநூறாய் சிதறுவதை
நீங்கள் ஒருபோதும் உணர்வதில்லை

மண்ணில் படாத மழைபோல்
மிகவும் தூய்மையானவர்கள் சிறார்கள்
மேலும் தன்பாட்டில் ஓடிக்கொண்டிருக்கும்
சாந்தமான நதியைப் போன்றவர்கள்

அவர்களது கனவுக் கோப்பைகளுக்குள்
முடிந்தளவு அன்பான சொற்களையிட்டு நிரப்புங்கள்
நீங்கள் தினமும் முணுமுணுக்கும்
மறக்க முடியாத இசையாக ஒலிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகளைக் கனியவைக்கும் மழை

குழந்தைகளின் விரல் நுனி பிடித்து
காடு மேடுகளைத் தரிசித்து
பள்ளத்தாக்குகளில் துள்ளிக் குதித்து
மிக அலாதியாக கரைந்து திரியவே
முகில் கூட்டங்களைக் கிழித்து
பூமிக்கு வருகிறது மழை

புன் சிரிப்போடு வரும் மழைக் குஞ்சுகளை
கண்களால் அருந்தி
தனது பிஞ்சு விரல்களால் செல்லமாய்த் தனகி
நனைந்து தொப்பாகி சிலிர்த்தமட்டில்
மழையோடு மழையாகிறது குழந்தை

தனக்கு மிகவும் விருப்பமான
கள்ளங்கபடமற்ற குழந்தைகளோடு
தெவிட்டாது ஊடாடுகையில் மட்டுமே
தன் பிறவிப் பயனை அடைகிறது
எல்லோர்க்கும் அமுதமான மழை

குழந்தைகள் குளித்து தெவிட்டும்வரை
பழமாகப் பெய்யும் மழை
மரங்களைத் துளிர்விடச் செய்கிறதோ
அன்றி நெடுங்கோடையை
வழியனுப்பி வைக்கிறதோ இல்லையோ
குழந்தைகளைக் கனிய வைத்துச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிக்குப் பிடித்த குழந்தையும் குழந்தைக்குப் பிடித்த பொம்மையும்

குழந்தையின் பராக்கைத் திருப்ப
அழகான காட்டு பொம்மைகளும்
இனிமையாய்ப் பேசிப் பழக
கிளிக் குஞ்சொன்றும் வாங்கி வந்தேன்

ஒரு தாயின் அன்பான முத்தத்தை
இறுகப் பற்றி அரவணைத்து
பொம்மைகளுக்குப் பரிசளித்தது குழந்தை
பின்னர் யாரும் சுண்டிப் பறிக்க முடியாதபடி
நெஞ்சோடு அணைத்து சுமந்து திரிந்து
தனியாக விளையாடிப் பொழுதைக் கழிக்க
ஒதுக்குப் புறமாய்ச் சென்றது குழந்தை

குழந்தையின் அபரிமிதமான செயல்களை
அதன் கழிவிரக்கத்தை
கூர்ந்து அவதானித்திருந்தமட்டில்
தன்னோடு குழந்தையை விளையாட வரும்படி
அடம்பிடிக்கிறது கிளிக்குஞ்சு

கிளியின் அழைப்பை கருத்திற்கொள்ளாது
தன் உலகத்தில் சஞ்சரிக்கிறது குழந்தை
கிளியைப் பாய்ந்து கவ்வும் பூனைபோல்
முறைத்துப் பார்க்கிறது பொம்மைகள்
அடம்பிடித்தபடியே சிறகடித்துக் கத்துகிறது கிளி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் பற்றியதான பாடல்

ஓர் போர் வீரனைப் போல்
நெஞ்சை நிமிர்த்தி நின்றபடி
எதிரிகளிடமிருந்து சோளக்காட்டை
கண்ணியமாக காவல் காக்கிறது விரட்டி

பனி மழை வெயில் பாராது தன்னந்தனியாக
காவல் காக்கும் விரட்டியை மனம் கூசாது
பொம்மையென்று பழித்து ஊளையிட்டு
எள்ளிநகையாடுகிறது நரிகள்

சோளக்காட்டைக் கொறித்து
நாசம் செய்ய வரும் கிளிக் கூட்டங்களை
பயமுறுத்தி விரட்டியடிக்கும்
ஆகக் குறைந்தபட்ச அதிகாரமாவது
விரட்டிக்கு இருக்கத்தான் செய்கிறது
என்ற உண்மையை நரிகளும் புரியாமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைக்குப் புரிந்த பறவையின் மொழி

சிறகுகள் கத்தரித்தபடி
கூண்டில் அடைபட்டிருக்கிறது
ஒரு காட்டுப் பறவை

அது தன் பூர்வீகத்தை நினைந்து
குரலெழுப்பும் தருணங்களில்
தன்னைத் திறந்துவிடுங்களென்று
கெஞ்சுவது போல் கேட்கிறது
என்று சொன்னது குழந்தை

இத்தனைக்கும் குழந்தை
நாலைந்து தினங்களாய்
அழுது அடம்பிடித்து வாங்கி வந்த
தனக்கு விருப்பமான பறவைதான் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் ஆன்மாவைப் பிழியும் பாடல்

வாழ்தலின் நெருக்கடி குறித்து
இறகுகள் முளைக்காத குஞ்சுகளை
அநாதரவாய் பரிதவிக்க விட்டபடி
தனியாக கடல்தாண்டிப் பறக்கிறது தாய்ப் பறவை

செவிலித் தாய்மார்களின் அரவணைப்பில்
அடம் பிடித்து வளரும்
பால்குடி மறவாக் குழந்தைகள்
பெட்டிப் பாலுக்குப் பழகிப் போனாலும்
தாய்ப் பாலுக்கேங்குவது கண்களில் வழிகிறது

ஈச்சமரக் காடுகளின் நடுவே
அதீத அலங்காரங்களுடன் ஒளிரும்
பளிங்கு மாளிகைகளின் கழிவறைகளில்
பால்சுரந்து வலி தணியும்வரைக்கும்
தினமும் யாருக்கும் தெரியாமல்
வீணாகப் பீச்சப்படுகிறது
ஆயிரமாயிரம் குழந்தைகளின் தாய்ப்பால்

தாயின் மார்பகங்களை விடவும்
தங்க உலகம் ஒன்றும் பெரிதல்லவென கருதும்
குழந்தைகளின் உணர்வுகளை
நம்மில் யாருமே நினைத்துப் பார்ப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழலுக்கு இறைத்த நீர்

சொற்களைச் செழுமை செய்து
மாபெரும் அவலங்களை ஆற்றுப்படுத்தி
புதிர்களின் முடிச்சுகளை
மிக நுணுக்கமாக அவிழ்த்து
வாழ்தலின் அழகினை
மீளவும் மீளவுமாய்ப் பாடினோம்

எங்களது எளிய பாடல்கள்
உங்களை இடையூறு செய்தும்
நச்சரிப்புகளை ஏற்படுத்தியும்
சில சமயம் மெய்யமறக்கச் செய்தும் இருந்ததுண்டு

மேலும் நீங்கள் பிறவிக் குருடர்கள் போலும்
செவிட்டு முண்டங்கள் மாதிரியும்
பாசாங்கு செய்துகொண்டும்
அலட்டிக்கொள்ளாமலும் இருந்திருக்கலாம்

இருந்தும் எங்களது சிறு பாடலேனும்
உங்களில் கடுகளவு மாறுதலையும்
ஏற்படுத்தவில்லையென்பதை உணர்கையில்
விழலுக்கிறைத்த நீராகிறது சொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழி தப்பி அலைதல்

வண்ணத்துப் பூச்சிகளின்
கூட்டங்களிலிருந்து பிரிந்து
வழிதப்பி அலைந்து திரிகிறது
பல நிறங்கள் குழைத்துப் பூசிய
சித்திரங்கள் ஒளிரும் வண்ணத்துப் பூச்சி

பலூன் ஊதிப் பெருக்கும் கணத்துள்
உம்மாவின் அரவணைப்பை மீறி
அதன் அழகின் உச்சத்தில் மயங்கி
சற்று பிடித்து விளையாட அவாவி
துரத்திச் செல்கிறான் சிறுவன்

வண்ணத்துப் பூச்சியும் மறுக்கி
சிறுவனின் வலையில் சிக்காமல்
காடு மேடெல்லாம் பறந்து
நெடுந்தூரம் அழைத்துச் செல்கையில்
வண்ணத்துப் பூச்சியோடு சேர்ந்து
சிறுவனும் வழிதப்பி அலைகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கத்தில் சஞ்சரிக்கும் சிறுவன்

இறகுகள் அரும்பி செட்டையடிக்கும்
குருவிக் குஞ்சுபோல்
கழுத்துப்பட்டி அணிந்து வெள்ளையும்
சொள்ளையுமாக முன்பள்ளி செல்கிறான் சிறுவன்

பள்ளி செல்லும் வழிகளில்
கைக்குள் சிக்காத காற்றைப் போல்
சந்து பொந்தெல்லாம் புகுந்து
தலைதெறித்துத் திரிகிறான்

நெல்லி மரத்திற்குக் கல்லெறிந்து
தன்பாட்டில் படுத்திருந்த
செல்லப் பிராணியைத் தனகி
குதிகால் முதுகில் முட்ட ஓடுகிறான்.
குட்டி ஆடுகளைத் துரத்திப் பிடித்து
தானும் ஓர் ஆடாக மாறி
பள்ளியை மறந்து விளையாடுகிறான்
சட்டைப் பையில் வைத்திருந்த
பத்து ரூபா குற்றியை காணத்து
கைவிடப்பட்ட சிறுவன் போல் தேம்பி அழுகிறான்

வகுப்பறையில் சர்ப்பம் போல் தொங்கும்
பிரம்பிற்குப் பயந்து கள்ளப்பட்டு
ஒதுக்குப் புறங்களில் ஊடுருவி
சப்பாத்துக் கள்ளியில் சிக்கிய சொப்பிங் பைபோல்
தினமும் உருக்குலைந்தபடி
வீடு திரும்புகிறான் சிறுவன்

புத்தகப் பையினை மறந்தபடி வரும்
சிறுவனின் சுட்டித்தனமானது
பெற்றோர்களுக்கு வெறுப்பையூட்டினாலும்
தனக்கான சொர்க்கத்தில்
சிறகுகட்டிப் பறப்பதாக உணர்கிறான் சிறுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரமற்ற நிலம்

ஒதுக்குப் புறமாய் கவனிப்பாரற்று
தனித்து நிற்கிறது
சடைத்த இளவயது மரம்

அதுவழியே பறந்து செல்லும்
அனேக பறவைகளின் ஓய்விடமாயிருக்கும்
தான்படுவான் மரத்தை
ஒரு மரம்வெட்டி அடியோடு வெட்டிச் சாய்க்க
மிக ஆவேசமாய் வருகிறான்

தனது கிளைகளை ஊன்றியபடி
வேர்களைக் கொண்டு
உயிர் தப்பியோட முனைகிறது
நிழல் வழிந்தோடும் அம்மரம்

பெரும் வனத்தை தனது கனிகளுக்குள்
பதுக்கி வைத்திருக்கும் அம்மரத்தை
ஒரு சாணும் நகரவிடாமல்
இறுகப் பிடித்து வைத்திருக்கிறது
ஈரமற்ற நிலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந் தவிப்பு

என் குழந்தைப் பராயத்தில்
அதீத விருப்போடு
வாப்பா வாங்கி வந்த கரடி பொம்மை

உடைந்துவிடும் என்று சொல்லி
சுண்டிப் பறித்து
கண்ணாடி அலுமாரியில் வைத்தாள் உம்மா
என் பிஞ்சு மனது
உடைந்து சிதறுவது பற்றி
சற்றும் உணராத ஏதோ ஒன்றைப்போல

எனக்கு மீசை முளைத்த பின்பும்
அங்காடியில் இருந்தாற் போல்
இன்னும் அப்படியே புத்தம் புதிதாய் இருக்கிறது
யாரேனும் ஒரு குழந்தை
தன்னோடு விளையாட வரமாட்டார்களா
எனும் இருபது வருடத் தவிப்போடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதையின் சித்திரம்

தன்னுயிரில் திரண்டிருந்த
தேவதையின் பிரதியை
சாலையோரம் நின்றிருந்த
பெருமரத்தின் உடலில் வரைந்து
ரசித்துச் செல்கிறான் ஒருத்தன்

மரமது உடலில் ஒளிரும்
தேவதையின் ஆடைகளை
இரக்கமின்றி துகிலுரித்துச் செல்கிறான்
அது வழியாகச் சென்ற காட்டுமிராண்டி

மறுநாள் காலை வந்து பார்த்தபோது
தனது நிர்வாணத்தை
மறைத்துக்கொள்ள சிறு திரையின்றி
தற்கொலை புரிந்திருந்தது
அவனது தேவதையின் சித்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊசித் தும்பிகளின் சிரிப்பை துளித்துளியாய்ப் பருகும் பிரம்பு

நீர்ப் பாம்புக் குட்டிபோல்
வீட்டுச் சுவரில் தொங்கி
ஈரக்குலை கருக பயமுறுத்துகிறது பிரம்பு
அது ஊர்ந்து திரிவதை
கவனித்தபடிதான் நகர்கிறது
என் குட்டி நட்டிக் காலம்

உதட்டில் வழியும் புன் சிரிப்பையும்
கன்றுக் குட்டியின் பயமறியாத தெறிப்புத்தனத்தையும
புகுந்து சொதப்பி துளித்துளியாய் பருகி
தீராத் தாகத்தோடு பதுங்குகிறது பிரம்பு

பின் மருண்ட விழிகளோடு
ஆடுகளைச் சாய்க்கும் இடையன்போல்
முன்பள்ளி வகுப்பறைகளிலும் ஊடுருவி
அதன் அட்டூழியம் பெருக்கெடுத்து
ஒழித்தோடவும் தூண்டுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமயம் அதன் கெடுபிடிகளின்
வன்மத்தில் பயந்து நடுங்கி
வகுப்பறையை நனைத்துவிடவும்
சொல்ல அவாவியதை அயத்து
பிதற்றும் நிலைக்கும் தள்ளிவிடுகிறது

ஊசித் தும்பிகளை உறுக்கி
சாட்டையால் அடித்துப் பிய்த்து
சிறகுகுளை உதிர்த்து விடுவதுபோல்
எங்களது குரலையும் முறித்து
புள்ளப் பூச்சியாய் மண்டியிடவும் வைக்கிறது

பிரம்புகளற்ற அமைதியான சூழலையும்
பசுமையான புல்வெளியையும்
முன்பள்ளி வகுப்பறைகளையும்
பிரபஞ்சத்தையும் அவாவிப் பிராத்திக்கிறது
அன்றி தேடிப் பறக்கிறது தும்பிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்தப்பாவின் அறை

சிலந்திவலைப் பின்னல்களும்
பூச்சிபுழுக்களின் ஆதிக்கமுமாக
காடுபற்றி இருள் சடைத்திருக்கிறது
நீத்துச் சுவரிலான மூத்தப்பாவின் அறை

உம்மம்மா காலஞ்சென்றதும்
பிரிவின் துயரிலிருந்து மீள்வதற்குள்
மூத்தப்பாவின் தொன்மையான அறை
கைவிடப்பட்ட ஒன்றைப்போல்
கவனிப்பாரற்று பூட்டியபடி கிடக்கிறது

மூத்தப்பாவின் ஓய்வைப் பறைசாற்றிய
தேக்குமர சாய்வு நாற்காலி
கடைசிவரை மிதித்துத் திரிந்த
ஹம்பர் துவிச்சக்கர வண்டி
சிலசமயம் கைத்தாங்கலாக
எடுத்துச் சென்ற பெரிதான கறுப்புக் குடை
எனக்கு குற்றிக் காசுகளை எடுத்துத் தந்த
மாந்தோல் இடுப்புப் பட்டியென
மூத்தப்பா பற்றிய சிறு துரும்பும்
அறையில் அப்படியே இருக்கிறது
மூத்தப்பாவைத் தவிர.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவனின் கனவை
## அறுத்துச் சென்ற காற்று

அதீத சோடனைகள் நிறைந்த
விலையுயர்ந்த காற்றாடி ஒன்றை
தனியாக விட்டபடி கூத்தாடுகிறது
கடலோரத்து தென்னை மரம்

அதன் மஞ்சள் அப்பிய ஓலைகளில்
சிக்கித் திணறிச் சிதறுகிறது
சிறுவனின் நிரப்ப முடியாத
அந்தி நேரப் புன்னகை

பெருநாள் ஆடைகளில் கரைந்தொழுக
குளிர்கழி வாங்கிச் சுவைக்காமல்
சேகரம் செய்த சில்லறைகளில்
மிகுந்த ஆவலோடு வாங்கிய
சிறுவனின் குறைந்தபட்சக் கனவுதான் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து தரிப்பிடக் கழிவறை

பேருந்துத் தரிப்பிடங்களில்
கவனிப்பாரற்றுக் கிடக்கும்
கழிவறைகளின் வெடுக்கை அள்ளியிறைத்து
குமட்டி எரிச்சலூட்டுகிறது காற்று

அதன் சாளரங்களை
காலம் சிதைத்திருக்கலாம்
அன்றி நாதியற்ற ஒருத்தனின் கூடாரத்தில்
புத்தம் புதிதாய் உயிர்வாழலாம்

அதன் தண்ணீரை வழிமறித்து
யாராவது கபளீகரம் செய்திருக்கலாம்
தவிரவும் நீர்க்குழாய்கள்
கனரக வாகனத்தில் நசிபட்டு நொறுங்கி
கவனிப்பற்ற ஒரு சூழலில்
எங்காவது வீணாக சிந்திக்கொண்டிருக்கலாம்

மேலும் வழப்புணி நாய்களால்
நாக்கைத் தொங்கவிட்டபடி வரையப்பட்ட
பெண்களின் மறைவான சொற்கள் மட்டும்
கழிவறைச் சுவரக்ள் முழுவதும்
குறோட்டன் செடி நிறங்களில்
பச்சையாக ஒழுகிக் கிடக்கிறது

இலையான்களின் கெடுபிடிகளோடு
குடலை உருவும் நெடியுமாக
பாழடைந்து தூர்ந்துபோய்க் கிடந்தபோதும்
கட்டாக்காலிகளின் ஓய்விடமாகியதில்
சற்று ஆறுதலடைகிறது கழிவறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலாதியாய் மல்லுக்கட்டும் பூனைக் குட்டிகள்

முன்பள்ளி வகுப்பறையில்
கொப்பி புத்தகங்களைக் கிழித்து
நிறப்பெட்டிகளை உடைத்து
அலாதியாகச் சண்டை பிடிக்கிறது
இரண்டு வண்ணத்துப் பூச்சிகள்

அணில் குஞ்சுகள் மாதிரி
கட்டிப்பிடித்து உருண்டு புரண்டு
சண்டை புரியும் வண்ணத்துப் பூச்சிகளை
விலக்கி விசாரித்தபோது
பெற்றோர்களின் பட்டப்பெயர்களை
சொன்னதற்காக மல்லுக்கட்டியதாகச் சொன்னார்கள்

இருந்தபோதும் பூனைக்குட்டிகளின்
குறும்புத் தனமான விளையாட்டைப் போல
கள்ளங்கபடமற்ற வண்ணத்துப் பூச்சிகளின்
சுட்டித்தனமான சண்டைகளை மீண்டும் மீண்டும்
ரசிக்கத்தான் அவாவுகிறது மனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து வேம்பு

ஊசித் தும்பியாய்த் திரிந்த காலத்தில்
இதே முற்றத்து வேம்பில்தான்
ஊஞ்சல் கட்டிப் பறந்ததாகவும்
பள்ளிக்குக் களவடித்து வந்து
ஊஞ்சலை மட்டுமே வாசித்து குதூகலித்ததாகவும்
கதைகதையாய் அளந்தார் வாப்பா

இன்று என் செல்லக் கிளிகளையும்
இதே வேம்பில்தான் ஊஞ்சல்கட்டி ஆடவைத்து
சிறு பராயக் கதைகளைச் சொன்னபடி
தினமும் உறங்க வைக்கிறேன்

ஒரு வாத்துக் குஞ்சுபோல்
முந்தானைச் சிறகுகளுக்குள் ஒழிந்துகொண்ட
றகுமத்தும்மா என்னோடு இல்லை
ஆலையடி, லெப்பையின் ஓதப்பள்ளி,
காட்டுவட்டை, கமம் திடல்,
நவியான் குளம், மேட்டுவட்டையென
என்னை காவித்திரிந்த
இரண்டு சகோதரர்கள் இப்போதில்லை

ஆனால் என் முற்றத்து வேம்பு மட்டும்
துளிர்த்து சடைத்து உதிர்ந்து
தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வாழ்கிறது
என் பேரன் பேத்திகளுக்குமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருத்து மணல் கனவுகள்

சிறகு நுனி நோண்டியபடி
கடும் கண்டிப்பில் வளர்கிறது மைனாக் குஞ்சுகள்

அது காடு மேடெல்லாம் கரைந்து
அருவிகளில் குளித்து
மலையுச்சிகளில் ஏறிநின்று கூச்சலிட்டு
வானத்தைச் சின்னிவிரலால் அசைத்து
உதிரும் விண்மீன்களைக் கோரி அள்ளி
முன்பள்ளி கொப்பிகளில் ஒட்டி ஒப்படை செய்து
பின் பள்ளத்தாக்குகளில் குதித்து
வண்ணத்துப் பூச்சிகளின் நிறங்களில் குழைந்து
காற்றைப்போல் தலைதெறித்து விளையாடும்
தங்களது பிரமாண்டமான கனவுகளை
மனம்விட்டுச் சொல்ல முடியாமல்
தினமும் போர்வைக்குள் மடித்து வைக்கிறது

அதிகாலை போர்வையை உதறும்
வேலைக்காரியின் முகத்தில் தெறித்து
சிதறிய சில்லறைக் காசுகள் போல்
படுக்கையறை முழுவதுமாக விரவிக் கிடக்கிறது
மைனாக் குஞ்சுகளின் தூர்ந்துபோன
குருத்து மணல் கனவுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூச்சாண்டி அல்லது பயமுறுத்தும் சொல்

பெரிதான காரணங்கள் ஏதுமின்றி
சிணுங்கிப் பெருக்கெடுக்கும்
அனேகமான குழந்தைகளின்
அழகான அடம்பிடிப்புகள்
பூச்சாண்டியென்ற பயமுறுத்தும் சொல்லுக்குள்
சிறு பூச்சியாகி உறைந்து போகிறது

பூச்சாண்டியின் வரைபடத்தை
இதற்கு முன்பு எந்தக் கும்மிருட்டிலும் கண்டிராமல்
படுக்கை விரிப்பில் சிறுநீர் கழித்தபடியே
பல்லியாகி பயந்தொடுங்கி தீர்ந்து போகிறது
கள்ளங்கபடமற்றவர்களின் குழந்தைப் பராயம்

நாளடைவில் குழந்தைகளும்
கச்சிதமாகப் பழகிக் கொண்டன
அடம்பிடிக்கும் பொம்மைகளை
பூச்சாண்டியின் பெயரைச் சொல்லி
பயமுறுத்தி அதட்டிவைக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்போன பொம்மை கிடைத்தபோது

செர்ரிப் பழமாய் உருளும்
இரத்தச் சிவப்புக் கண்களும்
கடல் நுரைப் பூக்கள் நிறத்தில் செய்த
வெண் பஞ்சு உடலும்
தோட்டிப் பறவையின் புள்ளி பூத்ததுமான
காப்பிலி முயல் பொம்மை
ஒரு பின்னிரவில் தொலைந்து போகிறது

வேலைக்குச் சென்ற பெற்றோர்கள்
வீடு திரும்பும் வரைக்குமாக
உப்புமூட்டை சுமந்து
அலுப்பின்றி விளையாடிக் களித்து
பெரும் ஆறுதலாக இருந்த பொம்மையது

கவனிப்பாரற்று சில காலமாக
பூட்டிக் கிடந்த அறையைத் திறந்து
கூட்டிச் சுத்தம் செய்தபோது கண்டெடுக்கப்படுகிறது
குழந்தையின் இணைபிரியாத முயல் பொம்மை

சொர்க்கமே பரிசாகக் கிடைத்ததுபோல்
துள்ளிக்குதித்து ஓடிவந்து
தனது பொம்மையைக் கைப்பற்றிய நொடியில்
குழந்தையைச் சுற்றி பாட்டம் பாட்டமாய்
மின்மினிப் பூச்சுகள் மொய்த்து
பெருகி வழிந்தது புன்னகை

இனி பெற்றோர்கள்
என்னதான் பழுத்தொழுகும் அம்புலியைக் காட்டி
சோறு பிசைந்து ஊட்டினாலும்
பொம்மையைத் தவிர வேறு எதையுமே
தற்போது குழந்தைக்கு பிடித்துப் போகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது மறைவான சொற்களும் சில தெரு நாய்களும்

எனது மறைவான சொற்களை
தெரு நாய்கள் வாசிக்க முடியாதபடி
மூடிய புத்தகமாய் வைத்திருக்கிறேன்

மூடப்பட்ட புத்தகத்தின் பக்கங்களை
வலுக்கட்டாயமாகத் திறந்து
அத்துமீறி வாசித்துப் புணரவே
மோப்பமிட்டுப் பதுங்குகிறது நாய்கள்

கடவாயிலிருந்து வீணி ஒழுகொழுக
நாக்கைத் தொங்கவிட்டபடி
எனது மறைவான சொற்களை
நடுத்தெருவில் நின்றபடி மேய்கிறது
வெறிபிடித்தலையும் கிழட்டு நாய்கள்

காமம் முற்றித் தலைக்கேறி
தனது மறைவான சொற்களை
கடித்துக் குதறாமலிருக்க
தினமும் போராடுகிறது புத்தகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளப் பூச்சியைத் தனகும் பூனைக் குட்டி

என் உம்மாவின் முகச் சாயலை
அச்சில் வார்த்தது போலிருக்கும் ஹயா குட்டியை
தனகித் திரிவதென்றால்
அமுதம் சாப்பிடுவது மாதிரி
ஓர் அலாதிப் பிரியம் சரினுக்கு

கண் விடுத்த பூனைக் குட்டிகள்
புள்ளப் பூச்சி கரப்பான்களை
பாய்ந்து பிடித்துத் தனகி விளையாடுவதுபோல்
பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியது

ஹயா தன் நாவப்பழக் கண்களை
உருட்டியுருட்டி கதைப்பதும்
இடைக்கிடை முடியைக் கோதிவிடுவதும்
சின்னி விரலைக் காட்டி
நாக்கைக் கடித்து உறுக்குவதும்
கிளிச்சொண்டு மூக்கை உயர்த்திப் பழிப்பதும்
உம்மாவிடம் ஓடிச் சென்று
தனது மழலை மொழியால் முறையிடுவதும்
சரின் சோறு தண்ணி மறந்து ரசிக்கும் ஒன்றாகும்

சில சமயம் முடியாத பட்சத்தில்
தான் பேயாக மாறி கடித்துக் குதறுவேனென்று
முழியைப் பிதுக்கி நாக்கை வெளியே தள்ளி
முடியை விரித்துப் போட்டு
சரினைப் பயமுறுத்திப் பார்ப்பாள் ஹயா

இதை அவதானித்த உம்மா
பேயாக மாறென்று சொன்னதும்
அது இப்போது முடியாது
பேய்கள் இரவில்தான் நடமாடும்
என்று சொல்லி தப்பித்துச் சென்றாள்
தரையில் ஓடித்திரியும் என் நிலாப் பிஞ்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பாத்து பற்றிய பாடல்

நிறம் மங்கி இத்துப் போன
தனது சப்பாத்தை அணிந்தபடி
தனித்துத் திரிகிறான் சிறுவன்
புதுச் சப்பாத்துப் பற்றியதான
நெடும் கனவுகளோடு

சிறுவனின் தனித்துத் திரிதலானது
வகுப்பு நண்பர்களினால் எறியப்படும்
நையாண்டிச் சொற்களிலிருந்து
தப்பித்துக் கொள்வதை வரைந்து காட்டுகிறது

சற்றுத் தொலைவில் மாடிவீட்டுச் சிறுவன்
புதுச் சப்பாத்து அணிந்தபடி
புல்வெளியில் அமர்ந்து
இயற்கையின் நிறங்களில் லயித்து
தானும் ஒரு நிறமாகி
பலூன் ஊதிக்கொண்டிருக்கிறான்

மாடிவீட்டுச் சிறுவனின் சப்பாத்தை
ஓரமாய் நின்று ரசிக்கையில்
கண்களால் அழைக்கிறான் சிறுவன்
தனது பிய்ந்த சப்பாத்தை நினைந்தழுது
தூரமாய்ச் சென்று ரசிக்கிறான்

சிறிது நேரம் சென்ற பின்னர்
மாடிவீட்டுச் சிறுவனை
சக்கர நாற்காலியில் அமர்த்தி
அழைத்துச் செல்கிறார்கள் பெற்றோர்கள்
ஊதிப் பெருத்தும் உடையாத பலூன்
ஏழைச் சிறுவனின் நெஞ்சில் வெடிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனது பராயத்தை வாசிக்க அவாவும் சிறுவன்

அடைமழை காலத்திலும்
பள்ளி நிழல் ஒதுங்காமல்
கட்டாக் காலிகள் போல்
ஊர் வம்பளந்து திரிந்ததில்
தூர்ந்து போகிறது வாப்பாவின் கனவு

மக்கிப் போன தனது கனவை
என் சிறு பராயத்தின் மீது திணித்து
ஒரு இடையன் போன்று
ஓது படி என்று அதட்டுகிறார் வாப்பா

என்னதான் உறுக்கி அதட்டினாலும்
முந்திரியம் சருகால் பட்டம் செய்து
காற் சட்டை வழுக வழுக
கடற்கரை வெளியில் விடுவதிலும்
வண்ணத்துப் பூச்சிகள் பிடித்து விளையாடி
அதன் நிறங்களில் குழைவதிலும்
ஊசித் தூறல் மழையை தனகி
தொப்பாகி கொடுகிக் கிடப்பதிலும்
அம்புலி மாமா பாடல் கேட்பதிலுமே
ஆர்வம் காட்டுகிறான் சிறுவன்.

குறிப்பு : இது எனது அன்பு மகன் றபாவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுந்து மூத்தம்மாவின் நாவமரம்

நாவப் பழங்களில் உறைந்திருக்கும்
இனிப்புச் சாறுகளில்
தனது நீண்ட நெடுங் காலத்தை
மிகச் செழுமையாக நகர்த்துகிறாள்
நாவமரமே காலாகிப்போன பசுந்து மூத்தம்மா

பனி தூறும் மிக அதிகாலை
கொடுகியபடி நாவப்பழங்களைச் சேகரிக்கும்
பசுந்து மூத்தம்மாவின் வரண்ட விரல்களானது
நீலம் பாரித்ததுபோல் தெரிகிறது

பாதி தின்னப்படாமல் திட்டுத் திட்டாய்க் கிடக்கும்
பழங்களைக் கண்டு வெந்து புழுங்கி
அணில் வெளவால் காகங்களை
ஒழுக்கமற்ற சொற்களால்
கடுமையாக வஞ்சிக்கிறாள் பசுந்து மூத்தம்மா

பட்சிகளினது சிறு பங்கினையும்
துளியும் இரக்கமின்றி
தானே வாரிச் சுருட்ட அவாவுவது
பசுந்து மூத்தம்மாவின் அறமற்ற குணத்தை
பச்சையாக வரைந்து காட்டுகின்றது

இத்தனைக்கும் பத்துப் பதினைந்து
ஆண்டுகளுக்கு முன்னரான
ஒரு நடுநிசியில் வெளவால் எச்சம் பீச்சிய விதையின்
தான்படுவன்தான் இந்த நாவமரம்
என்பதை மீட்டுப் பார்க்க
நினைவைத் திண்டுபோனாள் பசுந்து மூத்தம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூங்கில் காடுகளை
## தேடிச் செல்லும் சொற்கள்

சபைகளில் இலவசமாய்க் கிடைக்கும்
தேவையற்ற சொற்களால்
நிரம்பி பீறிட்டு வழிகிறது
உங்களது மனக் குடுவை

அது பனைமரத்து சிராய்வுகளால்
உங்களது மனதைச் சிரைப்பதோடு
கொடிய விஷப் பாம்புகளாய்
பிறரின் பூட்டிய அறைகளுக்குள்
அத்துமீறிப் புகுந்து ஊடுருவி
அமைதியைக் குலைத்துச் செல்கிறது

அவ்வாறு பன்றிக் கூட்டங்கள் போல்
கட்டுக்கோப்பின்றி அலைந்து திரியும்
அருவருப்பான வளப்புணிச் சொற்களை
பரிசுத்தப்படுத்தி கட்டிப்போடுங்கள்

மீறித் தப்பியோடும் சொற்களை
பூசி மொழுகி அரவணைத்து
விண்மீன்களைக் கொண்டு அழகுபடுத்துங்கள்
செப்பனிடப்பட்ட சொற்களை
மூங்கில் காடுகள் வந்து இசை மீட்கும்

இனி உங்களது மனக்குடுவைக்குள்
கரடுமுரடான காட்டுத்தனமான
எவ்வகைச் சொற்கள் வந்தாலும்
அது மூங்கில் காடுகளைத்
தேடிச் செல்லவே எத்தனிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுக் கிளியின் பூர்வீகத்தின் வரைபடம்

பல ஆண்டுகளுக்கு முன்னான
ஒரு மாலைக் கருக்கலில்
நகர்ப்புறத்துக்கு கடத்தி வந்து
பளிங்கு மாளிகையின் கோபுரத்தில்
சிறைவைக்கப்படுகிறது காட்டுக் கிளி

கிளியின் பிரிவுத் துயரைப் போக்க
அதீத அலங்காரங்களையும்
பகட்டும் சொகுசுமான ஆடம்பரமான வாழ்வையும்
தினமும் பரிசளிக்கிறது நகர்ப்புறம்

மேலும் அது இனிமையாகப் பேசவும்
அன்பாகப் பழகவும்
அலுப்பின்றி பொழுதைக் கழிக்கவும்
புத்திசாதுரியமான குழந்தைகளை
புதிது புதிதாய் அமர்த்துகிறது

இத்தனை ஆண்டுகள்
படாடோபமாகக் கழிந்த பின்னரும்
இன்னும் அதன் கண்களில்
சிறகு நுனிகளில்
கால்விரல் நக இடுக்குகளில்
அணுவளவும் சிதையாமல் ஒட்டியிருக்கிறது
காடு மலை அருவி நதிக்கரை
ஆகாயம் மரப்பொந்துகளென விரியும்
அதன் பூர்வீகத்தின் வரைபடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சு அல்லது நெடும் புதிர்

பறவை விலங்குகள் முதல் கொண்டு
கண்களுக்கு சற்றும் புலப்படாத
புழுப் பூச்சிகள் வரையென
எல்லா மரமட்டைகளுமே
அதனதன் பிறவிக் குணங்களோடுதான்
தன் வாழ்வை எழுதிச் செல்கிறது

பச்சை இரத்தம் குடிக்கும்
பேய் பிசாசுகள் போன்றோ
அன்றி காட்டுமிராண்டித் தனமான
வேறு ஏதாவதொன்றாகவோ
அவைகள் ஒருபோதும் தம்மை வரைந்தது கிடையாது

ஆனால் மனிதன் மட்டும்
தன் பிறவிக் குணத்தோடு
ஒருபோதும் பழமாக இருந்ததில்லை
தனக்குள் ஒன்றுக்கு மேலதிகமான முகங்களை
பதுக்கி வைத்தபடிதான்
காலத்தை கறைபடிந்தபடி நகர்த்துகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமான ஏதுக்களில்
இனங்காண முடியாத ஏதோ ஒன்றாக
அருவருப்பான சாக்கடை முகத்தோடு
மிகவும் இனிமையாகப் பேசியபடிதான்
நம்மோடு பழகித் திரிகிறான்
நிராகரிக்க இயலாத எல்லாச் சாத்தியங்களோடும்

புரியாத நெடும் புதிராக
தந்திரங்களின் பெரும் கிடங்காக
அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சாக
நமது படுக்கையிலும் கிடந்து புரளலாம்
மேலும் நமது வாழ்வின் தவிர்க்க முடியாத
தொடர்ச்சியாகவும் வரலாம்
இதற்கு முன் எங்கேயும் பார்த்திராத
யாரென்றே தெரியாத அவன் அல்லது அவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனது பிறவிப் பயனை அடைந்த மரம்

ஏரியில் சறுகி விழுந்து
காப்பாற்ற சரடு சல்லுமின்றி
நெடுநேரமாய் உயிருக்காய் போராடுகிறது
தனது கூட்டத்திலிருந்து பிரிந்து
வழிதவறி வந்த கட்டெறும்பு

கட்டெறும்பின் தத்தளிப்பைப் பார்த்து
மனம் பதறி இரங்கி
தனது பழுத்த இலைகளில் ஒன்றை
ஏரியில் உதிர்த்தி விடுகிறது
கரையோரமாய் நின்ற இளம் மரம்

சிறு படகாய் நகர்ந்து வரும்
இலையைக் கண்டமட்டில்
அதன் முதுகில் பத்திப் பதறி ஏறி
எப்படியோ கரைசேர்கிறது கட்டெறும்பு

கட்டெறும்பை காப்பாற்றிய பூரிப்பில்
தனது பிறவிப் பயனை அடைந்ததாக
இலைகளை உசுப்பி கத்திச் சொல்கிறது மரம்
இனி தன்னை வேரோடு சாய்த்தாலும்
பரவாயில்லை எனும் மனநிறைவோடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றை மறந்த தோட்டிப் பறவை

வாழ்விடத்தை அலகில் ஏந்தியபடி
சடைத்த மரமொன்றைத் தேடி
நாலைந்து தினங்களாய் அலைந்து திரிகிறது
ஒரு சோடிப் பறவைகள்

அதன் அந்தரிப்பைக் கண்டிரங்கி
மகவு ஊஞ்சல் கட்டிப் பறந்த
முற்றத்து மாமரத்தில் கூடுகட்டி வாழ்ந்திட
ஒரு கிளையில் மட்டும் இடங்கொடுத்தேன்

இப்போது மரத்தைச் சுற்றி வளைத்து
ஒரு இலையின் நிழலையும் மிதிக்க விடாமல்
ஊஞ்சல் கட்டி ஆடும் குழந்தையுட்பட
குடும்பத்தையே கொத்தி விரசுகிறது
வரலாற்றை மறந்த பறவைகள்

பறவையின் இருப்பிடத்தை சிதைத்து விடுவதா
குஞ்சுகளுக்கு சிறகு முளைத்து
பறக்கும் காலம் வரைக்கும் விட்டுவிடுவதா
கிடந்து பரிதவிக்கிறது மனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளப்பட்ட பறவைகள்

அடர்ந்த காடுகளில்
அதன் மரப் பொந்துகளில்
இன்னும் மலையிடுக்குகளில்
சுதந்திரமாக வசிக்கிறது பறவைகள்

அதன் அழகின் நிறங்களை
தனது புகைப்படச் சுருள்களுக்குள்
பிடித்து நிரப்பிக் கொள்ள
தருணம் பார்த்துக் குறிவைக்கிறான் நிழற்படக்காரன்

நம்மைத்தான் நிழற்படமெடுக்க வருகிறான்
என்றான செய்தி தெரியாமல்
தங்களது பூர்வீக நிலம் கடந்து
மொல்லெனப் பறந்து செல்கிறது பறவைகள்

சிலவேளை நிழற்படக்காரனை
வேடனென்று நினைத்து
உயிரை பொத்திப் பிடித்து
கிழிந்து பறந்திருக்கலாம்
இதற்கு முன் வலையில் சிக்கி தப்பித்த பறவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண் விழுங்கிய ஊர்

பாடசாலை சென்ற மாணவர்கள்
திரும்பி வந்து பார்த்த போது
தாம் கூடுகட்டி வாழ்ந்தமைக்கான
சிறு எச்சங்களுமற்று
தரிசு நிலமாக கிடந்தது ஊர்

புல் நுனிகளில் பனித்துளிகள் பூத்து
ஊசித்தும்பிகளும் சிறு பறவைகளும்
மின்மினிப் பூச்சிகளும்
கண்சிமிட்டித் திரிந்த அதிகாலை
ஒரு பழுமிலை நிலத்தில் விழும் கணத்தில்
வனப்புமிக்க எங்களூரின் குரலடங்கி
நூற்றாண்டு வரலாறும் புதையுண்டு போயிருந்தது

கொலைப் பசியில் இரைக்காகப் பதுங்கியிருந்த
ஒரு இராட்சதத் தவளை
புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த
அழகான பச்சை வெட்டுக் கிளியை
ஒரே பாய்ச்சலில் விழுங்கியது போல்
எங்களது ஊரையும் துடிக்கப் பதைக்க
பிடித்து விழுங்கியிருந்தது மண்

சடைத்த மரமொன்றில்
மிக ஒற்றுமையாய் வாழ்ந்து கழித்த
எங்களது ஊரை நினைந்து அழுகையில்
கொதிமண்ணில் சிக்கித் தவிக்கும்
மண்புழுப்போல் சுருண்டு துடிக்கிறது மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிற்கு அப்பாவாகவிருந்து
உழைத்துக் கொட்டிய ஆடுமாடுகள்
தோட்டம் தொரவுகள்
சிறுபராயம் முதற்கொண்டு நண்பர்கள் சகிதம்
ஊரளந்து திரிந்த சாலைகள்
விளையாடிக் கழித்த மைதானம்
அவலங்களைச் சொல்லி முறையிட்ட
பிரார்த்தனைக் கூடங்கள்
அத்தோடு படுத்துறங்கிய லயங்களென
ஒரு மண்ணுமிருக்கவில்லை
மண் ஆறுதான் பெருக்கெடுத்து ஓடுகின்றது

மேலும் அன்பாகப் பழகிய அயலவர்கள்
கூடித் திரிந்த நண்பர்கள்
கூடப் பிறந்த சகோதரர்கள்
எல்லாவற்றுக்கும் மேலாக
தினந்தோறும் கனவு கண்ட பெற்றோர்கள்
எல்லோருமே பெருக்கெடுத்த மண்மலைக்குள்
உயிரோடு புதையுண்டு போயிருந்தார்கள்

ஆண்டாண்டு காலமாய்
தங்களது குருதியை துளித் துளியாய்
தேயிலைக் கொழுந்துகளுக்கு
நிறம் பூசிப் பார்த்தவர்கள்
இன்று ஒரேயடியாய் உரமாகிப் போயினர்

இருந்தாலும் நம்பிக்கை இருக்கிறது
இனிவரும் வசந்த காலத்தில்
பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்துகளில்
நிச்சயம் ஒட்டியிருக்கும்
விதைக்கப்பட்ட எங்களூரின் உயிர்.

*குறிப்பு : 2014 நவம்பர் மாதம் மண்ணில் புதையுண்டு போன கொஸ்லந்த கிராமம் பற்றிய எனது பெருந்துயர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கடல்

நானும் கடலும் ஒன்றுதான்
எனக்கு சொற்களை அடக்கிவைக்கத் தெரியாது
கடலுக்கு அலைகளை அடக்கிவைக்கத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சல்களில் தொங்கித் தவிக்கும் குழந்தைகளின் மனம்

முதன் முதலாக குழந்தைகள்
தன்னில் ஏறி அமர்ந்ததும்
ஒரு ஆக்காட்டிப் பறவைபோல்
சிறகடித்துப் பறக்கிறது ஊஞ்சல்

தாயின் மடிதனில் ஆழ்ந்து
துயில்வதைப் போன்று
தங்களது உலகை மறந்து
ஊஞ்சல்களில் ஆடுகிறது குழந்தைகள்

வெளியே சென்ற குழந்தைகள்
திரும்பி வரும் வரைக்கும்
அம்மாக்கள் தவிப்புறுகிறார்களோ இல்லையோ
ஊஞ்சல்கள் ஏங்கித் தவிக்கின்றன

ஆடிக் களைத்த மட்டில்
இடை நடுவில் இறங்கிச் சென்ற பின்பும்
ஊஞ்சல்களில் தொங்கியபடியே ஆடுகிறது
அநேக குழந்தைகளினது மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிக எளிதில் நொறுக்கப்படக்கூடிய விளிம்பு நிலையில் உள்ள பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறுவர்களினது தேவைகள், பிரச்சினைகள் குறித்து பெரிதாக யாரும் பேசுவதுமில்லை கவனமெடுப்பதுமில்லை. அதிலும் சிறுவர்கள் பற்றி யாரும் பாடுவதுமில்லை, பாடுபொருளாகக் கொள்வதுமில்லை.

கவிஞர் ஜமீல் நீண்ட காலமாக சிறுவர்கள் தொடர்பில் அதீத அக்கறை செலுத்துபவராக பல்கலைக்கழக ஆய்வாளர்களாலும் விமர்சகர்களாலும் கவனத்தில் கொள்ளப்படுபவராக இருந்து வருகிறார். தாளில் பறக்கும் தும்பியில் சிறுவர்களினது விருப்பு வெறுப்புகள், முறையிடுதல்கள், குதூகலிப்புகள், துயருறுதல்கள், கனவுலகம், கழிவிரக்கம், காருண்யம், கற்பனை உத்திகள், வகுப்பறைச் செயலூக்கங்கள் வெளிநடத்தைப் பிறழ்வுகள், உளவியல் சிக்கல்கள், நுணுக்கமான பார்வை அல்லது அவதானம், பிரிவின் நீட்சி, ஏங்கித் தவிப்புறுதல் குழந்தைகளுக்கும் இயற்கைக்குமான நெருங்கிய உறவு போன்றவை செப்பமான கட்டுக்களுள்ள மொழியினால் உயர் தரத்தினாலான ஓவியங்களாக நிறம் தீட்டப்பெற்றிருக்கின்றன.

தாளில் பறக்கும் தும்பியில் ஜமீலின் படைப்பாற்றல் முன்னைய படைப்புகளை விடவும் தரத்திலும் வீச்சிலும் அழகியல் அம்சங்களிலும் ஒரு படி மேலே சென்று மிகப் பிரகாசமாக மின்னி ஒளிர்கின்றது.

அம்ரிதா ஏயெம்

ISBN 987-955-7733-00-5

விலை 280/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org